Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 20 (23.04.2003) புதன்கிழமை இதழ் :202

INTERNET BROWSING
உங்கள் கனவுகளை நனவாக்கும் விதத்தில் (Global Informatics) நிறுவனத்தின் மிகக்குறைந்த கட்டணத்தில் 1 hour - 50/= உங்கள் இணையத்தளத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
gi@netcafe
Internet Browsing Center
Global Informatics (pte) Ltd.
379, Kasthuriyar Road, Jaffna.
Tel - 0777 364247, 021 222 5735-6
(சி-866)

## புலிகள் சுட்டிக்காட்டிய விடயங்கள்; பரிசீலிப்பதாக பிரதமர் அறிவிப்பு!

### பாலாவின் கடிதத்துக்கு ரணில் பதில் கடிதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கு எழுதிய கடிதம் தொடர்பாக, பிரதமர் பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சிக்கலான விடயங்கள் தொடர்பாக, விடுதலைப் புலிகள் தமது கருத்தைச் சுட்டிக் காட்டி அனுப்பிவைத்த கடிதம் தமக்குக் கிடைத்துள்ளதாக, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ள 22 ஆம் திகதியிடப்பட்ட தனது கடிதத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டிய விடயங்கள் குறித்து, தாம் தீவிரமாகக் கவனம் செலுத்தியுள்ளதோடு அது குறித்து முழுமையான பிரதிபலிப்பையும் வெளிப்படுத்துவதாகவும் பிரதமர், அன்ரன் பாலசிங்கத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே அரசியற்தீர்வைக் காணவேண்டுமென்று, அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்துக் குறித்து, தாம் மகிழ்ச்சியடைந்ததாகவும் அந்தக் கடிதத்தில் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 95 இலிருந்த பாதுகாப்பு நிலை; உருவாக்க ஜனாதிபதி பணிப்பு!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு முப்படையினருக்கும் கட்டளையிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு, ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் பின்பு, அவர் இந்த உத்தரவை வழங்கினார். 1995 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலையிலிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மீண்டும் தீவிரமாக்குமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்தார். வீதித் தடைகள், ரோந்துகள், சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறும் அவர் உத்தரவிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பில் நேற்றுப் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு.

# சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## தற்போதைய நிலைவரம் குறித்து ரணில்-சந்திரிகா காரசார விவாதம்

(கொழும்பு)

**பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நேற்றுச் சந்தித்து, தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்துக் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின்போது, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகியதற்கான பின்னணி குறித்து இரு தரப்பினரும் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர்.**


விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம், தற்காலிகமாகப் பேச்சுக்களில் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்திருப்பது பற்றியும், ஜூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டோமென்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் பற்றியும் இருவரும் விரிவாக ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பின்போது, மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முதலில் செய்திருக்க வேண்டுமென ஜனாதிபதி பிரதமரிடம் தெரிவித்தார். இதைவிடுத்து - புலிகளுக்கு வானொலிக் கருவிகளையும், நிதியையும், ஆயுதங்களையும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதுவரை- அரசு, புலிகளைப் பலப்படுத்தும் முயற்சிகளையே செய்துள்ளது. இதனாலேயே மக்களின் அன்றாட வாழ்வு குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் போய்விட்டதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர்- புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது, நிர்வாகரீதியான பிரச்சினைகள் அரசிடம் இருக்கிறது. கடற்போக்குவரத்து மற்றும் புரிந்துணர்வு ஒப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அடக்கியாளுற ஞாபகம் அம்மையார விட்டு விலகயில்லை..!

## சமாதான நடவடிக்கையைப் புதுப்பிக்க நோர்வே குழு விரைவில் இங்கு வரும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டாலும், சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்படமாட்டாதென, அரசாங்க சமாதானக் குழுவின் தலைமையாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு கட்டுநாயக்க விமான நிலையம் வந்திறங்கிய அமைச்சர் பீரிஸிடம், புலிகள் பேச்சிலிருந்து விலகியது குறித்து செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில், சில விடயங்கள் குறித்து எழுந்துள்ள சிக்கல்களைக் கூடியவிரைவில் தீர்த்துக்கொள்ளமுடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கான பொறுப்பு நோர்வே பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது. அவர்கள் இதனை நிறைவேற்றுவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் இடம்பெறும் உபகுழு சர்வதேச மாநாடுகளில் பங்கேற்கும்!

### சந்திரசேகரனிடம் பிரதமர் யோசனை

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் ஒரு உபகுழுவை அமைத்து, அதில் விடுதலைப் புலிகளை இடம்பெறச் செய்வதன்மூலம், அவர்களையும் சர்வதேச நிதியுவி மாநாட்டில் பங்குபற்றச்செய்ய அரசு முயற்சிக்குமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன், நேற்று பிரதமரைச் சந்தித்து - புலிகள் பேச்சுக்களிலிருந்து இடைவிலகியமை குறித்துப் பேச்சு நடத்தியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

வட-கிழக்கு அபிவிருத்தி நிதியை தென்னிலங்கை அபிவிருத்திக்கு உப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அறிவிப்பை இந்தியா கவனிக்கிறதாம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியமை தொடர்பாக, இந்திய அரசு கவனித்துவருகிறது. தற்போதைய நிலையில் இது பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்க இயலாது என்று, இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளரான நவ்தேஜ் சர்னா இது பற்றி மேலும் கூறும்போது - தற்போது நடைபெறும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை தமது நாட்டுக்கு இருப்பதாக மட்டும் குறிப்பிட்டார்.

## இந்தியா வெளிப்படையாகவே சமாதானத்திற்கு உதவவேண்டும்

### "ஹிந்து"வுக்கு பாலா பேட்டி

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், சமாதானத் தீர்வுகளுக்கு இந்தியா வெளிப்படையாக உதவ முன்வரவேண்டும் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'ஹிந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# உடனடியாக நாடாளுமன்றைக் கூட்டுக; ஜே.வி.பி. சபாநாயகரிடம் கோரிக்கை!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தினை உடனடியாகக் கூட்டும்படி ஜே.வி.பி., சபாநாயகரைக் கோருவதென முடிவு செய்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றபோதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அண்மையில் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு சமர்ப்பித்த அறிக்கை சம்பந்தமாக விவாதம் நடத்துவதற்கே, உடனடியாக நாடாளுமன்றத்தினைக் கூட்டும்படி ஜே.வி.பி. கோரியுள்ளது.

கண்காணிப்புக்குழு - இநத அறிக்கை சம்பந்தமாக ஜனாதிபதியிடமோ அல்லது நாடாளுமன்றத்திடமோ அனுமதிபெறாமல் அறிக்கையை வெளியிட்டதானது, நாட்டின் இறைமையை மீறும் செயலெனவும், இது சம்பந்தமாக ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (01)

# வீதி விளக்கு அமைக்குமாறு பருத்தித்துறை மக்கள் கோரிக்கை

(நவிண்டில்)

பருத்தித்துறை நடராசா திறந்த வெளியரங்கிலிருந்து வெளிச்சவீடு வரையிலான வீதிக்கு, இலங்கை மின்சாரசபையூடாக மின் விளக்குகளை அமைத்துத்தருமாறு, பருத்தித்துறை நகர மட்டுப்படுத்தப்பட்ட கடற்தொழிலாளர் சங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி வீதியில் இரவுவேளைகளில் இருள் சூழ்ந்திருக்கும் காரணத்தினால் - கடற்கரைக்குப் பொழுது போக்கவரும் பொது மக்களும், குழந்தைகளும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (116)

# துன்னாலை கிழக்கில் 75 வீடுகளுடன் நிக்கொட் கிராமம் அமைக்கப்படும்!

(வடமராட்சி)

துன்னாலை கிழக்கில் நிக்கொட் நிறுவனத்தினால், எழுபத்தைந்து வீடுகள் அடங்கிய கிராமம் ஒன்று சகல வசதிகளுடனும் அமைக்கப்படவிருக்கின்றது.

துன்னாலை கிழக்கிலுள்ள ஆட்டுப்பட்டிக் கிராமத்திலுள்ள அரச காணிகள் இதற்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்றன.

இக்கிராமத்தில் ஒரு வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள் வாழ்வதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கே இங்குள்ள அரச காணிகளில் வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன. இங்கு அமைக்கப்படும் கிராமம், நிக்கொட் கிராமம் என அறிவிக்கப்பட்டிருப்பதுடன், இங்கு அமைக்கப்படவுள்ள எழுபத்தைந்து வீடுகளிலும் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதியாக பாடசாலை அமைக்கப்படுவதுடன், மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகள், மலசலகூடங்கள், வீதிகளும் அமைக்கப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு கிராமங்களைத் தெரிவுசெய்து, நிக்கொட் நிறுவனம் - நிக்கொட் கிராமங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்படி - யாழ். மாவட்டத்தில் இந்தக் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக்கிராமத்தை அமைப்பதற்கு, 20 மில்லியன் ரூபா நிதியினை நிக்கொட் ஒதுக்கீடு செய்துள்ளது.

இக் கிராமத்திலுள்ள நிலப்பரப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக, யாழ்.மாவட்டச் செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் சாம்பசிவம், கடந்தவாரம் இப்பகுதிக்குச்சென்று, இங்குள்ள மக்களுடைய புள்ளிவிபரங்களையும் பெற்றுச்சென்றுள்ளார்.

இக்கிராமத்தை, அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள், இவ்வருட நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.(23)

# குடாநாட்டில் விலையுயர்வைக் கட்டுப்படுத்த விலைநிர்ணயக்குழு அமைக்க ஆலோசனை

குடாநாட்டில் வர்த்தகர்களால் பொருட்கள் சமமற்ற விலைகளில் விற்கப்படுவதைத் தவிர்க்க - விலை நிர்ணயக்குழு அல்லது சபை ஒன்றை அமைப்பதுபற்றி ஆலோசிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

கூடிய விலையில் பொருட்கள் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே, நுகர்வோர் சங்கங்களை அழைத்து அதன்மூலம் பொருட்களின் விலை நிர்ணயம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சமூக மட்டத்தில் அமைக்கப்படவுள்ள நுகர்வோர் குழுக்களை ஒன்றிணைத்தே இந்த விலை நிர்ணயக்குழு அமைக்கப்படவிருப்பதாகவும்,

இதன்மூலம் குடாநாட்டுச் சந்தையில் பொருட்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என நம்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

## வவுனியாவுக்கு மூன்று அம்புலன்ஸ

ஆசிய அபிவிருத்தி வங்கி வவுனியா மாவட்டத்துக்கு மூன்று அம்புலன்ஸ் வண்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

ஒவ்வொன்றினதும் பெறுமதி 3 மில்லியன் ரூபாவாகும். செட்டிக்குளம், நெடுங்குளம், பூவரசங்குளம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களே இவையாகும்.

# வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கு சிங்களப் பெயர்களில் அனுமதிஅட்டை

2003 ஆம் ஆண்டு உயர்தரப் பாரீட்சைக்குத் தோற்றும் மாணவ மாணவிகளின் அனுமதி அட்டையில், விண்ணப்பிக்கப்பட்ட பெயர்களுக்குப்பதிலாக சிங்களப் பெயர்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வடமராட்சிப் பிரதேசத்தில் எட்டு மாணவ மாணவிகளுக்கு சிங்களப் பெயர்களையுடைய அனுமதிஅட்டைகள் கிடைத்தன.

அவர்களில் - வேலாயுதம் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கும், வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவிகளுக்கும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் ஒருவருக்கும் இவ்வாறு சிங்களப் பெயர்களிலான அனுமதி அட்டைகள் கிடைத்துள்ளன.

இந்த அனுமதி அட்டைகள், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கல்லூரி அதிபர்களால் திருப்பியனுப்பப்பட்டு, பின்னர் அவை திணைக்களத்தினால் திருத்தப்பட்டு- மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிக் கடிதங்கள் மேற்பார்வையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (116)

# 60 ஆயிரம் சவுக்கு மரங்கள் வடமராட்சியில் நடத் திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் இந்த வருடம் அறுபதாயிரம் சவுக்கு மரங்கள் நாட்டப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு வளம்பேணும் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்தகால யுத்த நிறுத்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி, படையினரின் அனுசரணையுடன் பெருமளவான சவுக்கு மற்றும் கண்டல் மரங்கள் பொதுமக்களால் தறிக்கப்பட்டதுடன், சவுக்கம் காடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இதன்போது பெருமளவிலான மரங்கள் அழிக்கப்பட்டன. இவற்றினை ஈடுசெய்யும் நடவடிக்கையாக, வளம் பேணும் சங்கம் கடந்த வருடம் முப்பதாயிரம் சவுக்கு மரங்களை நாட்டியது.

இந்த வருடம், அறுபதாயிரம் சவுக்கு மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இருபதாயிரம் சவுக்கு மரங்களுக்கான நாற்றுமேடை போடப்பட்டுள்ளது. இவை அகற்றப்பட்டதும் அடுத்த கட்டமாக - முப்பத்தையாயிரம் நாற்றுகளுக்கான நாற்றுமேடை போடப்படவுள்ளதாக வளம் பேணும் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

நாற்று போடப்பட்ட இந்த சவுக்கம் கன்றுகள் - குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில் நடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மரமுந்திரிகை மரங்களும் நடுகை செய்யப்படவிருக்கின்றன.

மரமுந்திரிகைச் செய்கையினை மேற்கொள்வதற்கான நடவடிக்கையையும், வடமராட்சி கிழக்கு வளம் பேணும் சங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக மரமுந்திரிகை நடுகை செய்வது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (23)

# இலங்கையில் முதன்முறையாக பெற்றோர் பாடசாலைகள்

## மட்டக்களப்பில் அமைக்கப்படும்

இலங்கையின் கல்வி வரலாற்றில் முதன்முறையாக பெற்றோர் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வலயக் கல்வித் திணைக்களப் பணியகத்தின் கீழ் இயங்கும் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு வலயங்களில் அமைந்துள்ள பின்தங்கிய பிரதேசங்களிலேயே, முதன்முறையாக பெற்றோர் பாடசாலைகள் அமைக்க திட்டமிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களிடையே கல்வியின் தொடர்பும் அதன் வளர்ச்சியும், பிள்ளைகளின் வளர்ச்சியும், கல்வியின் முக்கியத்துவமும் என்ற தொனிப் பொருள்களில் விழிப்புணர்ச்சியேற்படுத்துவதே இப்பாடசாலைகளை ஆரம்பிக்கும் நோக்கமாகும்.

இந்த - பெற்றோர் பாடசாலைகளின் பணிப்பாளராக கிழக்குப் பல்கலைக்கழக கல்விப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் எம். செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் இது தொடர்பான, ஒருமாதகாலப் பயிற்சிநெறியை இஸ்ரேல் நாட்டில் முடித்துத் திரும்பியிருக்கிறார்.

இப்பாடசாலையில் - 14 வயதிற்குட்பட்ட மாணவர்களின் பெற்றோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன், வாரத்தில் இரு மணித்தியாலங்களுக்கே வகுப்புக்கள் இடம்பெறவுள்ளதாகவும், இப்பாடசாலை இடம்பெறும் வேளையில் உணவு முதல் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்களால் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் கோட்டை அருகிலுள்ள முனியப்பர் கோவில் பகுதியில், நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் தகாத செயலில் ஈடுபட்ட ஆணும் பெண்ணும் சமூக சீர்திருத்தக் குழுவினரால் பிடிக்கப்பட்டனர்.

கடுமையான எச்சரிக்கையின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். (61)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடப் பரீட்சைகள் - 2002

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களிடமிருந்து பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 22.04.2003 திகதி முதல் 30.04.2003 திகதி வரை கலைப் பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. முதலாம் வருட முதலாம் அரையாண்டு.
(கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்)
02. நுண்கலைமாணி இசை/நடனம் - நான்காம் வருடப் பரீட்சை.

மீள்பரீட்சைகள்

03. முதற் கலைத் தேர்வு (பழைய பாடத் திட்டம் )
04. பொதுக்கலைத் தேர்வு பகுதி 1/ சிறப்புக்கலைத் தேர்வு பகுதி 1
(பழைய பாடத்திட்டம்)
05. பொதுக்கலைத்தேர்வு பகுதி 11/ சிறப்புக்கலைத் தேர்வு பத்தி 11
(பழைய பாடத்திட்டம்)
06. சிறப்புக்கலைத்தேர்வு பகுதி 111 (பழைய பாடத்திட்டம்)
07. இரண்டாம் மொழி ஆங்கிலம் - 1,11,111 (ESL Level 1,11,111)
08. நுண்கலைமாணி இசை/நடனம் - நான்காம் வருடம்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்
22.04.2003. (சி/865)



ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
(குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்)
10.30, 2.30, 6.30, 9.30
(சி-732)



நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)


# இன்றைய நாள் இனிய நாள்

## 23-04-2003 - புதன்கிழமை

மேடம் :- தாழ்ந்தநிலை, தொழில் கஷ்டம். பூமியால் லாபம், பிரயாசைக்கேற்ற லாபமின்மை.

இடபம் :- இனசன விரோதம், பிரயாசை மிகுதி, வியாதி, குடும்ப மனஸ்தாபம்.

மிதுனம் :- அதிகாரவிருத்தி, சத்துருநாசம், வாகனலாபம், தொழில் சிறப்பு

கர்க்கடகம் :- மனக்கவலை, குடும்ப மனஸ்தாபம், ரோகபீடை, தொழில் கஷ்டம்

சிங்கம் :- இனசனக் கொண்டாட்டம், பிரயாசை மிகுதி, பணக் குறைவு, தொழில் சமம்.

கன்னி :- ஏமாற்றம், அதிகார சித்தி, ரோகபயம், தொழில் சிறப்பு, பணவரவு.

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

துலாம் :- தனவிருத்தி, சிநேக லாபம், புதிய ஸ்தானம், களஸ்திர புத்திர மகிழ்ச்சி.

விருச்சிகம் :- குடும்ப மகிழ்ச்சி, நற்கீர்த்தி, தேக ஆரோக்கியம், நற்குண விருத்தி.

தனு :- புத்திர பந்துக்களால் கவலை, சோம்பல், ஏமாற்றம், எல்லோராலும் வெறுக்கப்படுதல்.

மகரம் :- தொழில் விருத்தி, சத்துரு வெற்றி, சிநேகலாபம், நற்கீர்த்தி.

கும்பம் :- இரத்தக்காயம், சரீரபலக் குறைவு, ஊக்கமிகுதி, சத்துரு பயம்.

மீனம் :- ஆரோக்கியம், அந்நிய உதவி, தனித்த நிலை, பொருட் சேதம்.

# முழுச்சக்தியையும் பயன்படுத்தி அமைதி முயற்சிக்கு உதவுவோம்

## தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் அறிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குத் தென்னாபிரிக்க அரசாங்கம் தனது முழுச்சக்தியையும் பயன்படுத்தி உதவும் என்று தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் டிலாம்னி கொசானா கமா தெரிவித்துள்ளார்.

பிரிட்டோரியாவில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைதி முயற்சிகளுக்கு உதவுவது பற்றி இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கும் தென்னாபிரிக்கா தயாராக உள்ளது.

வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்ப உதவிகள் என்பனவற்றையும் தென்னாபிரிக்கா - இலங்கைக்கு வழங்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, சமாதானப் பேச்சுக்களைத் தென்னாபிரிக்காவில் நடத்துவதற்கான அழைப்பினையும் அமைச்சர் பீரிஸிடம் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

# பேச்சுக்களிலிருந்து புலிகள் விலகியமை கவலை தருவதாக சந்திரிகா அறிவிப்பு!

## முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேசினார்



சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்ள எடுத்தமுடிவு, கவலை தருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் எடுத்துள்ள இந்த முடிவு, சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்துவதாகவும், அடிப்படைகளற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகிக்கொள்வதாக எடுத்தமுடிவு குறித்து ஆராய்வதற்கு, நேற்றுமுன்தினமிரவு ஜனாதிபதி சந்திரிகா - முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அவசரமாக நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய அரசு திட்டம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதாக, விமான நிலைய, விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் கட்டடங்களையும், அதன்சேவை வசதிகளையும் புனரமைப்புச் செய்து, அபிவிருத்தி செய்வதற்கே அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

தெற்காசியாவின் மிகச் சிறந்த விமான நிலையமாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசாங்கம் இதற்கென 8 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலரைச் செலவிட முடிவு செய்துள்ளது. இதற்கான உதவிகளை ஜப்பானிய அரசாங்கம் வழங்கும்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தினமும் 40 விமானங்கள் தரையிறங்குவதாகவும், இதனூடாக வருடாந்தம் 30 லட்சம் பயணிகள் பயணம் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் விமான நிலையத்துக்கு வருடாந்தம் 400 கோடி ரூபா வருமானம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் அடுத்த வருடம் நிறைவு பெறும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றங்கள் வேண்டும்!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்கிறார்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின்போது, திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை தாம் வலியுறுத்தப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் காரணமாகவே இவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## நெடுமாறன் பிணை மனு நிராகரிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகக் கைதுசெய்யப்பட்டு, 'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட ஆறு பேரின் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.



'நமது ஈழநாடு' ஆதரவில், எஸ்.ரீ.பி. கணினி நிறுவனம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடத்திய இலவச கணினிக் கருத்தரங்கில் விரிவுரை நடைபெறுவதையும், அதில் பங்குகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பழைய உணவு உண்ட நால்வர் ஆஸ்பத்திரியில்

முதல்நாள் சமைத்த உணவினை, மறுநாள் சாப்பிட்ட நால்வர் வாந்தி காரணமாக நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த இராஜதுரை யசோதரன் (வயது 25), இராஜதுரை யசோதா (வயது 18) ஆகிய இரு சகோதரர்களும், சதீஸ்வரன் நிஷாந்தி (வயது 4), திருணா தினேஸ் (வயது 8) ஆகிய இரு சிறுவர்களுமே நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# மூதூரில் தளம் அமைக்கும் பணியில் அரச படையினர்!

(மூதூர்)

மூதூரில் தமிழ்மக்கள் செறிவாக வாழும் பகுதியில், நிரந்தர இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், புதிய படைமுகாம்களை நிறுவுவது குறித்து சர்ச்சைகள் நிலவிவருகின்றபோதும், படையினர் மூதூரில் முகாம் அமைப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மூதூரில் நிலவிய தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நெருக்கடி நிலையைப் பயன்படுத்தியே படையினர் தளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மூதூரில் பதற்றத்தைத் தணிக்கவும், நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் என அனுராதபுரம் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய படையினரே, அங்கு நிரந்தரமாகத் தங்கியிருக்கும் நோக்குடன் படைத்தளத்தை அமைத்து வருவதாகத் தெரியவருகிறது.

மூதூரில் தமிழ்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த முகாம் அமைக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# தமிழ்க்குழுக்களை பாதுகாக்க ரணிலின் அரசு தவறிவிட்டது!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டுகிறார்

(கொழும்பு)

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்:எவ் ஆகிய இயக்கங்களின் உறுப்பினர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தவறிவிட்டதாக ஜனாதிபதி சார்பாக, அவரது ஊடகச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர் மாரிமுத்து இராசலிங்கம் கொலை செய்யப்பட்டதையடுத்து இந்த அறிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் -

புலிகள் இயக்கத்தினர் பல தமிழ அரசியல்வாதிகளைக் கொலை செய்துள்ளனர்.

பொலிஸ் அறிக்கையின்படி புலிகளின் பிஸ்ரல் குழுவினரே இக் கொலைகளைச் செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள அனைத்து மக்களின் பாதுகாப்புக்கும், மனித உரிமை பேணுவதும் அரசாங்கத்தின் பொறுபபாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசியாவின் வீரபுருஷராக பிரதமர் ரணில் தெரிவு!

ஆசியாவின் சிறந்த வீரபுருஷராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை 'ரைம்' சஞ்சிகை தெரிவு செய்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காட்டிவரும் தீவிரமான ஆர்வத்துக்காகவே, அவா சிறந்த வீரபுருஷராகத் தெரிவு செய்யப்பட்டதாக 'ரைம்' சுட்டிக் காட்டியுள்ளது.

'ரைம்' சஞ்சிகை ஆசியாவின் வீரபுருஷர்கள் என 29 பேரின் பட்டியலைத் தயாரித்திருக்கிறது. ஆளுமை, ஊக்கம் என்பனவற்றின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக 'ரைம்' சஞ்சிகை அறிவித்துள்ளது.

# 'லங்காராணி' கப்பல் விற்பனை; அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு!

## முறைகேடு இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகம்

(திருகோணமலை)

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'லங்கா ராணி' கப்பல் - தனியார் வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் திடீரெனத் திருகோணமலைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்தபோதுதான் - அவருக்கு லங்கா ராணி கப்பல் - தனியார் கப்பல் நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்பட்டமை தெரியவந்தது.

இதுகுறித்து அவர் கப்பல் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் விசாரித்தபோது, இந்த விற்பனையில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்தே - முழு விசாரணைகளையும் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம், அதிகாரிகளைப் பணித்தார்.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் முதலாம் பாதம் வரை)

**உங்கள் விசேட தனித் திறன்கள்**

சிறந்த தெய்வ பக்தி. மற்றவர்களிடம் பொறாமையில்லாத குணம், தவறு செய்தவர்களை மன்னிக்கும் சுபாவம். சுயநலமின்மை.

**உங்கள் பலவீனம்**

பிறரை எளிதில் நம்பிவிடுவது. அளவிற்கு மீறிய பொறுமை, நிதானம், வாழ்க்கையில் நல்ல சந்தர்ப்பங்களை மனமறிந்து இழத்தல்.

**14.04.2003 முதல் 16.08.2003 வரை**

உங்கள் ராசிக்குக் களஸ்திர ஸ்தானத்தில் சனிபகவான் மாறுவதால், மனைவியின் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது.

கணவன் - மனைவியிடையே ஒற்றுமை குறையும். அஷ்டம ஸ்தானத்தில் குரு இருப்பதும் நல்லதல்ல. எவ்வளவு பணம் வந்தாலும் அத்தனையும் செலவழித்துவிடும். வேறு வழிகளிலும் பணம் விரயமாகும். பொருட்கள், பணம் களவு போகவும் வாய்ப்புள்ளது. ராகுவினால் நன்மைகளை எதிர்பார்க்கலாம். முயற்சிகள் கைகூடும்.

கடன் தொல்லைகள் குறையும், திருமண முயற்சிகளில் தடங்கல்கள் நீடிக்கின்றன. நீதிமன்ற வழக்குகளில் எவ்வித முடிவுமின்றி இழுபறி நிலை நீடிக்கும். வருமானம் போதுமான அளவிற்கு இருப்பதால் குடும்ப நிர்வாகத்தில் சிரமமிராது.

களஸ்திர ஸ்தானம் பாதிக்கப்பட்டிருப்பதால் தாம்பத்ய சுகம் குறையும். இதனால் குடும்பச் சூழ்நிலையும், குழந்தைகளின் நலன்களும் பாதிக்கப்படக்கூடும். ஜெனன காலக் கிரகநிலைகளும், தற்கால தசாபுத்திகளும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் குடும்பத்தில் பிளவு ஏற்படக்கூடும்.

ஜூலை மாதத்தின் பிற்பகுதியிலிருந்து உங்கள் ராசிக்கு குரு பகவானின் சுபப் பார்வை கிடைப்பதால், சிரமங்கள் சிறிது குறையும். ஆரோக்கியமும் அபிவிருத்தி அடையும். இருப்பினும் இந்தச் சனி பகவானின் 21/2 ஆண்டு மிதுனராசி சஞ்சாரத்தின்போது கணவன் - மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. குடும்பத்தில் எதிர்பாராத வீண் செலவுகளும் ஏற்படக்கூடுமென கிரகநிலைகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

உத்தியோகத்தில் வேலைச்சுமையும், பொறுப்புக்களும், அலைச்சலும், உழைப்பும் அதிகமாக இருக்கும். ஆயினும், அதற்கேற்ற முன்னேற்றம் இருக்கும். சிலருக்கு இடமாற்றம் அல்லது நிறுவன மாற்றம் இருக்கக்கூடும்.

இந்த ராசியினர் நேர்மைக்கும், உழைப்பிற்கும் பெயர் பெற்றவர்கள். 'உழைப்பே உயர்த்தும்' என்ற கொள்கையுடைய நீங்கள், இந்த ஆண்டு நல்ல அபிவிருத்தி அடைவீர்கள் என்ற நம்பிக்கையைக் கிரக நிலைகள் உறுதிசெய்கின்றன. தொழிற்துறையினருக்குப் போட்டிகள் நீடித்தாலும், அவை எவ்விதத்திலும் உங்கள் தொழில் முன்னேற்றத்தைப் பாதிக்காது.

இருப்பினும், தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டங்களை அடுத்து வரும் நான்கு மாதங்களுக்கு ஒத்திப் போடுவது நல்லது. வர்த்தகத்துறையினருக்கும் கிரகநிலைகள் அனுகூலமாக உள்ளன.

ஆதலால், போட்டிகள் அனைத்தையும் சமாளித்து நல்ல லாபம் காண்பீர்கள். சக கூட்டாளிகளினால் எவ்விதப் பிரச்சினையும் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

**அரசியலில் ஈடுபடுவோர்**

கட்சியில் செல்வாக்கு நீடிக்கிறது. அரசாங்கத் தொடர்புகளினால் நல்ல ஆதாயம் கிடைக்கும். தொண்டர்கள் ஆதரவு தருவார்கள்.

மேலிடத்தின் ஆதரவு உண்டு. ஒரு சிலருக்குத் தலைநகர் சென்று அங்குள்ள செல்வாக்குள்ள அரசியல் தலைவர்களைச் சந்திக்கவும், அதனால், நன்மைகள் ஏற்படவும், சாத்தியக் கூறுள்ளது.

**மாணவமணிகள்**

கல்வி சம்பந்தப்பட்ட கிரகங்கள் சுபபலம் பெற்றிருப்பதால், உங்கள் கல்வி முன்னேற்றத்தில் எவ்விதப் பிரச்சினையும் ஏற்படாது. ஆண்டுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் திகழ்வீர்கள். உயர்கல்விக்கு நீங்கள் விருப்பப்படும் கல்வி நிறுவனத்தில் விரும்பும் துறையில் இடம்கிடைக்கும்.

வெளிநாடு சென்று படிக்கும் உத்தேசம் இருப்பின், அதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ளலாம். விசா கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது எனக் கிரக நிலைகள் எடுத்துக்காட்டுகின்றன. எந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பம் இருந்தால், உங்கள் ஜாதகத்தை ஆராய்ந்து முடிவெடுக்கவும்.

**விவசாயத்துறையினர்**

வருமானமும், விளைச்சலும் திருப்திகரமாகவே இருக்கும். கால்நடைகள் அபிவிருத்தியடையும். சிறு அளவில் அரசாங்கச் சலுகைகளும், நிதிநிறுவனங்களின் உதவியும் கிடைக்கும். பழைய கடன்களினால் தொல்லைகள் எதுவும் இராது. விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் திட்டமிருப்பின் அதற்கான முயற்சிகளை இப்போது மேற்கொள்ள வேண்டாம்.

**பெண்மணிகள்**

குடும்பப் பொறுப்பிலுள்ள சகோதரிகளுக்கு அடுத்துவரும் நான்கு மாதங்கள் அனுகூலமாக இல்லை. ஆதலால், குடும்பத்தில் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிவரும். எதிலும் பொறுமை, நிதானம் அவசியம். ஆனால், வேலைக்குச் சென்றுவரும் பெண்களுக்கு வேலை பார்க்குமிடத்தில் மகிழ்ச்சியும், மன நிறைவும் கிடைக்கும். வீட்டில் வேதனை, அலுவலகத்தில் அமைதி என்ற நிலைதான்.

**ஆரோக்கியம்**

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. ஏதாவதொரு உடல் உபாதை அடிக்கடி ஏற்பட்டுச் சிரமத்தை உண்டு பண்ணும். அவ்வப்போது சாதாரண மருந்துகளால் குணமடையும். உங்களுக்கு நீரிழிவு, இதய சம்பந்தமான நோயிருப்பின் மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதும், மருத்துவர் கூறியுள்ள மருந்துகளை வேளை தவறாமல் உட்கொள்வதும் அவசியம். அதனால் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

**பொருளாதாரம்**

வரவும், செலவும் கிட்டத்தட்ட சமமாகவே இருக்கும். சேமிப்பிற்குச் சாத்தியமில்லை. செலவுகளும் அதிகமாகவே இருக்கும். திட்டமிட்டுச் செலவு செய்தால்- பிறர் உதவியை நாடவேண்டிய அவசியமிராது. கூடியவரையில் வீண் செலவுகளைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

**17.08.2003 முதல் 12.04.2004 வரை**

குருபகவான் உங்கள் ரா[illegible] பாக்ய ஸ்தானத்திற்கு [illegible] சரிப்பது பல நன்மை[illegible]ளுக்கு அளிக்க இருக்[illegible] பச் சூழ்நிலையில் மிக [illegible] மாறுதலைக் காணலாம். இதுவரை தடைப்பட்டுவந்த திருமணம் முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல வரன் அமையும்.

**தமிழ்நாட்டின் பிரபல சோதிட சக்கரவர்த்தி ஏ.எம்.இராஜகோபாலன்**

வருமானம் உயர்வதால் பொருளாதாரம் சீர்படும். தவிர்க்க முடியாத நெருக்கடியினால் சென்ற நான்கு மாதங்களில் உங்களுக்குக் கடன்கள் ஏற்பட்டிருந்தால் அவற்றை இப்போது அடைத்துவிட முடியும்.

புதிய ஆடை, ஆபரண சேர்க்கையும் உண்டு. உத்தியோகத்துறையினருக்குப் பதவி உயர்வும், அதனால் சம்பளம் அதிகரித்தலும் எதிர்பார்க்கலாம்.

பூர்வ புண்ணிய ஸ்தானத்தை குருபகவான் பார்வையிடுவதால் தீர்த்த, ஸ்தல யாத்திரையும், அருளாளர் தரிசனமும் கிட்டும். மனத்தில் ஆன்மீக சிந்தனையும் ஓங்கும். ஆரோக்கியம் அபிவிருத்தியடையும்.

ஜெனன காலக் கிரகநிலைகளின் அடிப்படையில் ஒரு சிலருக்குப் புத்திரபாக்கியம் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. கவலைகள் நீங்கும், வேதனைகள் மறையும்.

புதிய வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு மிகவும் அனுகூலமான காலகட்டமிது. பல காரணங்களினால் சென்ற சில மாதங்களாக வேலையின்றி வருந்தும் இந்த ராசியினருக்குப் புதிய நல்ல வேலை கிடைக்கும்.

மத்தியகிழக்கு நாடான ஈராக்கில் ஏற்பட்ட யுத்தத்தினால் குவைத், ஈராக் போன்ற நாடுகளில் பணியாற்றி வந்த பலர் உத்தியோகத்தை இழந்திருக்கக் கூடும்.

குருபகவானின் பார்வை விசேஷத்தால் இவர்கள் அனைவருக்கும் விரைவில் வெளிநாடுகளில் நல்ல வேலை கிடைக்கும். அதனால், எதிர்காலம் சிறப்பாக இருக்கும்.

பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். மீண்டும் செல்வம் சேரும். குழந்தைகள் படிப்பில் நல்ல அபிவிருத்தி காண்பார்கள். புதிதாக வேலைக்கு முயற்சி செய்யும் தனு ராசியினருக்கும் இனி நல்ல காலமே. பழைய கடன்களை அடைப்பதற்கு உகந்த நேரமிது. (கும்பம் ராசி நாளை)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வீட்டுப்பாவனை பொருட்கள் அன்பளிப்பு

(பளை)

எக்கோ திட்டத்தின் கீழ் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து - மாசார் கிராமத்திலுள்ள 100 குடும்பங்களுக்குச் சுமார் 4 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த வீட்டுப் பாவனைப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (115)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மடம் வீதிப் பகுதியில் அண்மைக்காலமாகக் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ். மடம் வீதி ரயில் பாதைப் பகுதியில் கசிப்பு விற்பனையும், தயாரிப்பும் அதிகரித்துள்ளது. அவ்வீதியினால் பயணம் செய்வோர் இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். அதுமட்டுமன்றி, அருகே அமைந்திருக்கும் பாடசாலைக்கும் இதனால் பெரும் இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.

நிறைபோதையில் வரும் சிலர் - வீதிகளின் குறுக்கே வீழ்ந்து கிடப்பதனால், இப்பகுதியில் இரவுவேளைகளில் வாகனம் செலுத்துவதற்குச் சாரதிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, தெருவிளக்குகள் பலவும் அடித்து நொறுக்கப்பட்டுள்ள நிலையில், குன்றும் குழியுமாக வுள்ள இவ்வீதியில் இரவுவேளை பயணம்செய்ய முடியாதுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## கண்டெடுத்த அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - கோணாவிலைச் சேர்ந்த கணேசன் சுஜிபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப் பட்டு "நமது ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர், வேலை நேரத்தில் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததால் - பன்னீர்ச்செல்வம் கிருஷ்ணகுமார் (வயது 21) தலையிலும் காலிலும் படுகாயமடைந்துள்ளார்.

இவர், கிளிநொச்சியிலிருந்து அம்புலன்ஸ் வண்டிமூலம் கொண்டு வரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டார். (லி)

## திருடர்களை பிடிக்க கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாகத் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. சில வீடுகளில், ரீ.வி, டெக், பணம், நகைகள் என்பவை திருடர்களால் இரவுவேளைகளில் களவாடப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் பல வீடுகளில் திருட்டு முயற்சிகள் - மக்கள் விழிப்படைந்ததால் தோல்வியடைந்தன.

தொடரும் திருடர்களின் தொல்லைகளுக்கு முடிவுகட்டவும், திருடர்களை மடக்கிப் பிடிப்பதற்காகவும் தற்போது அப்பகுதி இளைஞர்கள் இரவுவேளைகளில் விழிப்பிருந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். (55)

## மரவேலை, மேசன் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சி கிழக்கு)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் - மரவேலை, மேசன் வேலை ஆகிய இருபயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ள இப்பிரிவில் வசிக்கும் 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் வசிக்கும் கிராம அலுவலர் ஊடாகவே அனுப்பப்படவேண்டுமெனவும், 6 மாத காலப் பயிற்சி நெறியில் பங்குபற்றுவோருக்குப் பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 1000 வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை டிப்போவில் 10 நடத்துநர்கள் நியமனம்

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை டிப்போவுக்குப் பத்து நடத்துநர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் இந்த மாதம் முதல் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் கடந்த இருவாரங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. தற்போது இவர்களுக்குப் பஸ்தரிப்பு நிலையங்கள் விளக்கப்பயிற்சி நடைபெற்று வருகின்றது.

இன்னும் சில தினங்களில் இவர்கள் சேவையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (23)

## பொதுக்கிணறுகள் அமைப்பு

அரச நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினர் - இத்தாவில் கிராம சேவகர் பிரிவில் சதாபுரம் கிராமத்திலும், முல்லையடி கிராமசேவகர் பிரிவில் முனியப்பர் ஆலயத்திற்கு அருகாமையிலும் இரு பொதுக்கிணறுகள் அமைக்கும் பணிகளை மேற் கொண்டுள்ளனர்.

இதனைக் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆரம்பித்துவைத்தார்.(115)

# இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருவது அதிகரித்திருப்பதாகத் தெரி வருகின்றது. கடந்த சில மாதங்களில் இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுடெல்கி, பெங்களூர், சென்னை, திருச்சி, மும்பாய், திருவனந்தபுரம், புத்தகாய ஆகிய இடங்களிலிருந்து கொழும்புக்கு மேற்கொள்ளப்படும் விமான சேவைகளும் இதனால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரியவருகின்றது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் :இ.சிந்துஜன்
முகவரி : அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





## மாணவர் மலர்

1. கீழே உள்ள கட்டத்திற்குள் தரப்பட்டுள்ளவற்றை அட்டவணைக்குள் வகைப்படுத்துக

> தைப்பொங்கல், நத்தார், நோன்புப் பெருநாள், வெசாக், சுதந்திர தினவிழா, பெரியவெள்ளி, குடியரசு தினவிழா, போசன், ஹஜ்ஜுப் பெருநாள், தீபாவளி, சிவராத்திரி.

கட்டத்திற்குள் உள்ள சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| சைவ சமயத்தவர்களுடைய விசேட தினங்கள் | கிறீஸ்தவர்களுடைய விசேட தினங்கள் | இஸ்லாமியருடைய விசேட தினங்கள் | பௌத்தர்களுடைய விசேட தினங்கள் | இலங்கையின் தேசிய விழாக்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

2. தொடர்புபடுத்துக.


| | A | B |
|---|---|---|
| 1. | இலங்கையின் மிக உயர்ந்த நீர் வீழ்ச்சி | குமண |
| 2. | மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் கருவி | வலைப்பந்தாட்டம் |
| 3. | காற்றின் திசையை அறிய உதவும் கருவி | பம்பரகந்த |
| 4. | இலங்கையின் மிக உயரமான மலை | கிளித்தட்டு |
| 5. | கிராமிய விளையாட்டுக்களுள் ஒன்று | மழைமானி |
| 6. | இலங்கையில் உள்ள விலங்குகளின் சரணாலயம் | பேதுறுதாலகால |
| 7. | நவீன விளையாட்டுக்களுள் ஒன்று | திசையறிகருவி |
| 8. | இலங்கையிலுள்ள பறவைகளின் சரணாலயம் | வில்பத்து |

3. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

அ. நிகழ்வு சிவசங்கர் வெளிநாடு சென்று வேலை செய்தால், நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்து வெளிநாடு சென்றான். அங்கு சென்று வேலை தேடியும், நிறையச் சம்பளம் பெறக்கூடிய வேலை கிடைக்கவில்லை.

1. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
2. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
3. ஆழம் அறியாமல் காலை விடாதே

4. சுகுமார் தன்னைச் சுற்றி விளையாட்டுப்பொருட்களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. சுகுமார் பேருந்து இருக்கும் திசையை நோக்கி அமர்ந்திருக்கிறான்




1. சுகுமார் கிழக்குத் திசையில் வைத்த பொருள் யாது? (........................)
2. சுகுமார் முச்சக்கரவண்டியை எத்திசையில் வைத்துள்ளான்? (........................)
3. கப்பல் எத்திசையில் உள்ளது? (........................)
4. சுகுமார் மாட்டுவண்டியை வைத்துள்ள திசை யாது? (........................)
5. அவன் காரை எத்திசையில் வைத்துள்ளான்? (........................)
6. லொறி எத்திசையில் வைக்கப்பட்டுள்ளது? (........................)
7. மேற்குத் திசையில் வைக்கப்பட்டுள்ள பொருள் யாது? (........................)
8. கப்பல் ஒன்றின் விலை ரூபாய் 125.00 ஆகும். கார் ஒன்றின் விலை ரூபாய் 375.00 ஆகும். கப்பலுக்கும் காருக்கும் இடையிலான விலை வித்தியாசம் யாது? (........................)
9. துவிச்சக்கரவண்டியின் விலை ரூபாய் 75.00 ஆகும். துவிச்சக்கர வண்டியின் விலையிலும் பார்க்க நான்கு மடங்கு விலைக்கு உலங்கு வானூர்த்தி விற்கப்படுகின்றது எனின், உலங்கு வானூர்தியின் விலையாது? (........................)
10. கப்பல், கார், துவிச்சக்கரவண்டி, உலங்கு வானூர்தி ஆகியவற்றின் மொத்த விலை யாது? (........................)

5. பின்வரும் பந்தியில் **ஐந்து சொற்கள் எழுத்துப் பிழைகளைக் கொண்டுள்ளன.** அச்சொற்கள் எவையெனக் கண்டுபிடித்து அவற்றைச் சரியாக எழுதிக் காட்டுக

மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருட்கள் சூளலிலிருந்து கிடைக்கின்றன. உணவுப் பயிர்களை பயிர் செய்வதன் மூலமும், விலங்கு வேளான்மை மூலமும் இன்று மனிதன் தனது உணவுப் பொருட்களையும், பாணங்களையும் பெற்றுக் கொள்கின்றான். உணவு உட்கொள்வதன் மூலம் உடலை நோயற்றதும், வளிமையுள்ளதுமாக விருத்தி செய்து கொள்ளலாம். எமது நாட்டு மக்களின் பிரதான உணவாக அறிசிச்சோறு இருக்கின்றது.

1..........................................................
2..........................................................
3..........................................................
4..........................................................
5..........................................................

6. சுகாதார சேவை மருத்துவிச்சியொருவர் ஆற்றும் மூன்று சேவைகளைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக

- கிராமிய வைத்தியசாலைகளின் வாட்டுகளில் சேவையாற்றுதல்
- தாய்மார்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துவதற்கான அறிவுரை கூறுதல்
- பிள்ளைகளைப் பராமரித்தல்
- உணவுப் பதார்த்தங்களின் ஊட்டச்சத்துப் பெறுமானம் குறித்து ஆலோசனை வழங்குதல்
- போலியோ வக்சீன் எடுக்க வேண்டியமை பற்றி அறிவுரை கூறுதல்
- வயோதிபர் இல்லத்திற்குப் பொறுப்பாக இருத்தல்

1..........................................................
2..........................................................
3..........................................................

7. பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடை தருக

| | |
|---|---|
| பெருமளவு மக்கள்.<br>பல்வேறு வகையான காய்கறிகள்.<br>சில பொருட்கள் மலிவு.<br>விதம் விதமான பொம்மைகள்.<br>வாசனைமிகு பழங்கள். | இங்கு கூறப்பட்ட செய்தி சந்தை பற்றியது எனின், கடைசி வரியின் கீழ்க் கோடிடுங்கள். அவ்வாறன்றி வைத்தியசாலை தொடர்பானது எனின், முதலாவது வரியின் கீழ்க் கோடிடுங்கள். |
| நாகதாளி<br>கள்ளி<br>இராவணன் மீசை | இங்கு தரப்பட்டுள்ளவை வரண்ட பிரதேசத் தாவரங்கள் எனின், இரண்டாவது சொல்லின் கீழ்க் கோடிடுங்கள். அவ்வாறன்றி குளிர்ப்பிரதேசத் தாவரங்கள் எனின், மூன்று சொற்களையும் சுற்றி வட்டமிடுக. |
| நெல் - நாற்று<br>வாழை - குட்டி<br>பனை - வடலி<br>கமுகு - பிள்ளை<br>மா - கன்று | இங்கு தரப்பட்டுள்ளவை இளமைச் சொற்கள் எனின், மூன்றாவது வரியின் கீழ்க் கோடிடுங்கள். எதிர்கருத்துள்ள சொற்கள் எனின், நான்காவது வரியின் கீழ்க் கோடிடுங்கள். |

8. கீழே 'அ' முதல் 'உ' வரையும் உள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் அவை கருத்துத் தொடர்புள்ள ஒரு பந்தியாக அமையும். வாக்கியங்களின் ஒழுங்கு பற்றிய வினாக்களுக்கு விடை தருக

(அ) அது இனிமையும் சத்தும் உள்ளது.
(ஆ) பாலைக்காய்ச்சி உறை இட்டு வைத்தால் அது தயிராகும்.
(இ) பாலைக் கறந்தவுடன் குடித்தல் நல்லது.
(ஈ) தயிரைக் கடைந்து மோரும், வெண்ணையும் எடுக்கலாம்.
(உ) பசுவின் பால் நமக்குச் சிறந்த உணவாகும்.

1. பந்தியின் முதல் வாக்கியம் எது?

(1) உ (2) அ (3) இ (4) ஆ

2. பந்தியின் இரண்டாம் வாக்கியம் எது?

(1) இ (2) அ (3) உ (4) ஈ

3. பந்தியின் மூன்றாம் வாக்கியம் எது?

(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

4. பந்தியின் நான்காவது வாக்கியம் எது?

(1) ஈ (2) அ (3) இ (4) ஆ

5. பந்தியின் ஐந்தாவது வாக்கியம் எது?

(1) ஈ (2) ஆ (3) உ (4) இ

9. ''நான் கதைப்புத்தகம்'' ஒன்றை எடுத்து...

என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்த பட்சம் நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

1..........................................................
2..........................................................
3..........................................................
4..........................................................
5..........................................................
6..........................................................

(தொடரும்.)

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A (cey) B.Ed (Hons) Dip.in.Ed.



# புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் தோற்றம்பெறாத இயல்புநிலை!

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தாம் திகதியன்று முழு உலகத்தின் கவனமும் தமிழீழத்தின் வன்னிப் பெருநிலத்தின் மீதே இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அன்றுதான் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார்.

இந்தச் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டை நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலமும் மிகப் பொருத்தமான ஒன்றுதான். சிறிலங்கா அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுப் போர் நிறுத்தம் உத்தியோகபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படத் தொடங்கிய காலம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த நேரம். அடுக்கடுக்கான இராணுவ நகர்வுகள் மூலம் அலை அலையாக வெற்றிகளை அடைந்து, இயக்கம் இமயத்தின் உச்சியில் நின்றிருந்த நேரம்.

பரவிப்பாஞ்சான் என்ற இடத்தில் அமைந்திருந்த அந்தக் கேட்போர் கூடத்திற்குச் சகல ஊடகவியலாளர்களும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். தமிழீழ நேரத்தின்படி மாலை ஐந்து மணிக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மேடைக்கு வந்தார். அவரைக் கண்டவுடன் செய்வது அறியாது தம்மை மறந்த உடனேயே எழுந்து நின்றவர்கள் பலர். களிப்பில் கை தட்டியவர்கள் பலர். காணக்கிடைக்காத பாக்கியத்தைக் கண்ணுற்றதனால், கண் கலங்கியவர்களையும் அன்று காணக் கூடியதாக இருந்தது.

கீழைத்தேய ஊடகவியலாளர்கள் - குறிப்பாகச் சிறிலங்காவின் சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும், தென்னிந்திய ஊடகவியலாளர்களும் பழைய விடயங்களைக் கிளறுவதில் அதிக அக்கறை காட்டினார்கள். அவர்களது கேள்விகள் கிளர்ச்சியூட்டும் வகையிலே, கோபமூட்டும் விதத்திலேதான் அமைந்திருந்தன. எப்பொழுது தலைவர் தடுமாறுவார்- நிதானம் இழப்பார் என்பதை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். அதே வேளை - மேலைத்தேய ஊடவியலாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் - நாட்டின் பொருளாதாரம் குறித்தும் அதிக கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

இவை அனைத்திற்கும் தேசியத் தலைவர் நிதானமாக, தெளிவாக, ஆழ்ந்த சிந்தனையோடுதான் பதிலளித்தார். தலைவரின் பதில்களை ஆங்கிலத்தில் நெறிப்படுத்திய அன்ரன் பாலசிங்கத்தின் பங்கு குறிப்பிடும்படியான முக்கியத்துவம் கொண்டிருந்ததாக தேசியத் தலைவர் அன்று பதிலளித்தமுறை குறித்து ஹிந்து (**Hindu**) பத்திரிகை விமர்சித்திருந்தது. அது குறித்து இங்கு நாம் எமது கருத்துக்களைச் சொல்லியாக வேண்டும்.

தனது தீர்க்கமான விழியசைவிலே ஒரு பாரிய இயக்கத்தின் செயற்பாட்டை நடத்தக்கூடிய வல்லமை படைத்த ஒரு தலைவன், தனது சொல்லசைவை வெளிப்படுத்தும்பொழுது எவ்வளவு நிதானமாக, கவனமாக இருப்பான் என்பதை ஹிந்து பத்திரிகை உணர வேண்டும். கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய பதில்களுக்காகச் சிந்திகக வேண்டிய அவசியம் தலைவருக்கு இல்லை. ஏனென்றால், அவை ஏற்கெனவே தெரிந்த பதில்கள்தான். ஆனால், அந்தப் பதில்களை வெளிப்படுத்துகின்ற சொற்களை, அச்சொல் தரக்கூடிய பலவித அர்த்தங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய கடமை அவருக்கு உண்டு. அதில் அவர் காட்டிய நிதானம், அக்கறை, பொறுமை, தெளிவு என்பன - ஒரு தேசியத் தலைவருக்குரிய பொறுப்புணர்ச்சியையும், தீர்க்க தரிசனத்தையும்தான் காட்டிநின்றன என்பதை நாம் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

சரியாக ஓராண்டுக்கு முன்னால் நடந்த இந்த முக்கிய நிகழ்ச்சியின் விபரங்களை விபரிப்பது அல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். தேசியத் தலைவர் நடத்திய இந்தச் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் - அதன் நோக்கம் - அதன் தாக்கம் என்பது குறித்துப் பார்ப்பதோடு மட்டுமல்லாது, அன்றைய தினம் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கங்கள், கருத்துக்கள் என்பவை இன்று ஓராண்டு கழிந்துள்ளவேளையில் - எவ்வளவு தூரம் தெளிவாக, தீர்க்கமாக இருக்கின்றன என்பதை ஆராய்வதுமாகும்.

இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆறு கட்டங்களைத் தாண்டியுள்ள வேளையில், எந்த விதமான அரசியல் தீர்விற்கு விடுதலைப்புலிகள் இணங்குவார்கள்? என்ற விடயம் குறித்து பலர் அலட்டிக்கொள்வதை நாம் இங்கே காண்கிறோம். சமஷ்டி ஆட்சி குறித்துப் பரவலான கருத்துக்களும், அவை குறித்த விளக்கங்களும் தினமும் உலகளாவிய ரீதியில் சொல்லப்பட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை - தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்கள் - என்ற கருத்தை உலகளாவிய ரீதியில் விதைத்து வருவதற்கு ஒரு கூட்டமே செயற்பட்டு வருகின்றது. துரதிர்ஷ்டவசமாக இன்று இத்தகைய பிரசாரத்தில் ஏமாறுகின்றவர்கள் எம்மவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதுதான் மிகவும் மனவருத்தத்தைத் தருகின்றது.



தமிழீழத் தேசியத் தலைவரின் செய்தியாளர் மாநாட்டில்

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில், சில அடிப்படைக் கொள்கை விளக்கங்களைத் தமிழீழத் தேசியத் தலைவர் மிக விரிவாகத் தெளிவுபடுத்தியிருந்தார்.

பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் தனது மாவீரர் தின உரையின் பொழுதும் இவற்றை மீண்டும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்தச் சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டீர்களா? என்ற கேள்விக்குத் திட்டவட்டமாக- தெளிவாகத் தலைவர் பதில் அளித்திருந்தார். தமிழீழக் கோரிக்கை கைவிடப்படவில்லை. என்று அவர் ஆணித்தரமாகக் கூறியது மட்டுமல்லாமல், அதற்குரிய தேவை இன்னும் எழவில்லை என்றும் தெளிவுபடுத்தியிருந்தார்.

சயனைட் குப்பிகள் எப்பொழுது கைவிடப்படும் என்ற இன்னுமொரு கேளவிக்கு- நிரந்தரத் தீர்வு முதலில ஏற்படவேண்டும் எனத் தலைவர் பதிலளித்திருந்தார். தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளின் தலைமையோ, அவர்களது பேசசாளர்களோ கூறவில்லை என்பதை இங்கு நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

தமிழீழம் என்ற சொல்லாக்கத்தின் அரசியல் உரிமையின் அடித்தளமான தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்பவற்றின் அடிப்படைகள் அன்றையதினம் வலியுறுத்தப்பட்டன. ஈழத்தமிழர்கள் இதுவரை காலமும் சிறிலங்கா அரசுகளாலும், இந்திய இராணுவத்தாலும் பட்ட இன்னல்கள் குறித்து ஒரு கேள்வி கூடக் கேட்கப்படாத நிலையில், ஈழத தமிழரின் நியாயமான அடிப்படை அரசியல் உரிமைகள் குறித்து ஒரு கேளவிகூடக் கேட்கப்படாமல் இருந்த வேளையில், சுயநிர்ணய உரிமை குறித்துத் - தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்குரிய பதிலைத் தேசியத் தலைவரின் சிந்தனையின் வடிவத்தைப் பாலசிங்கம் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினார்.

பாரம்பரியத் தாயக பூமியையும், தனித்துவமான மொழியையும், பண்பாட்டையும் கொண்டுள்ள எமது மக்கள் - ஒரு தேசிய இனத்தவாகள் ஆவார்கள். அந்தத் தேசிய இனம் தமது அரசியல், பொருளாதார வாழ்வைத் தாமே தீமானிக்கும் உரிமை கொண்டவர்கள். அந்த உரிமைக் கோட்பாடுதான் சுயநிர்ணய உரிமையாகும். அது உள்ளான, புறமான இரண்டு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையைக் கொண்டதாகும். புறமான சுயநிர்ணயம் என்பது பிரிந்து சென்று தனியரசை அமைப்பதாகும்.

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருந்தார். கடந்த ஆண்டு மாவீரர் உரையின் பொழுது தேசியத் தலைவர் சுயநிர்ணய உரிமை குறித்து மேலும் தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழ்மக்கள் தமது சொந்த மண ணில் வரலாற்றுரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில்- அந்நிய சக்திகளின் தலையீடு, ஆதிக்கமின்றிச் சுதந்திரமாக- கௌரவ மாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அபிலாஷை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்தப் பரிமாணம் இதில்தான் அடங்கியுள்ளது.

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர்- தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்து, அதன் அர்த்தப் பரிமாணம் குறித்து மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் தலைவர்- அரசியல்தீர்வு குறித்துச் சொல்லும்பொழுது- தாயகம், தேசியம், தன்னாட்சி என்பன தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாஷைகளாகும். இந்த முப்பெரும் அரசியல் ஆதாரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஓர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுமானால், அதனை எமது மக்களும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் நாம் அதனைப் பரிசீலிப்போம் என்று கூறினார்.

இந்தக் கருத்தையே மீண்டும் தனது மாவீரர் தினவுரையின் பொழுது தலைவர் வலியுறுத்தியுள்ளார். அரசியல்தீர்வு குறித்துத் தலைவர் இப்படிக் கூறியிருந்தார்.

சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு வைக்கப்பட்டால், அத்திட்டத்தைச் சாதகமாகப் பரிசீலனை செய்வோம். அதேவேளை எமது மக்களுக்கு உரித்தான உண்மையான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டுப் பிரதேச சுயாட்சி நிராகரிக்கப்பட்டால், நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

அந்த வகையில், இந்த வாரம் ஜெனீவாவில் நடந்த அமைதிப் பேரணியை நாம் பாராட்டத்தக்கது. ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மையக்கூட்டத் தொடரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழீழத்வர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளார்கள். தலைவர் தெரிவித்திருந்த தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிககப்பட்ட வேண்டும் என றும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ்ப் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்திருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும், தமிழீழ மக்கள் மீதான மீன்பிடித் தடை நீக்கப்படவேண்டும் எனறும், இறுதி அரசியற்தீர்வு எட்டுகின்ற வரை தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்றும், தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்திருக்கும் நாடுகள் அதனை நீக்கவேண்டும் என்றும் பல கோரிக்கைகள் புலம் பெயர்ந்த தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்டன.

இத்தகைய பேரணிகளும், பிரசாரங்களும், பரப்புரைகளும் மிக முனைப்பாகச் செய்யப்பட வேண்டியவேளை இதுவாகும். நியாயமான, நிரந்தரமான, கௌரவமான சமாதானத் தீர்வினை விரும்புகின்றவர்கள் இத்தகைய பரப்புரைகளைத் தொடர்ந்து செய்திட வேண்டும். இது எமது மக்களின் தேசியப் பிரச்சினை. அவர்களது அடிப்படை உரிமைக்கான போராட்டம்.

எனவே, ஓராண்டுக்கு முன்னால் வன்னிப்பகுதியில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் பொழுது- தமிழீழத் தேசியத் தலைவர் கூறிய கொள்கை விளக்கங்களை, தமிழழ மக்களின் அபிலாஷைகளை, வேட்கையை உலகளாவியரீதியில் பரப்புரை செய்து, அரசியல் அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டியது தமிழீழத்தவர்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசிற்குமிடையான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து, உலக நாடுகள் பலவும் அக்கறைகாட்டி வருகின்றன என்கின்ற கூற்று மிகையான ஒன்றல்ல.

இலங்கைத்தீவில் போர் ஓய்ந்து சமாதானம் நிலவவேண்டும் என்பதில் உலகநாடுகளும், தங்களுடைய தேசியப் பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான, கௌர வமான சமாதானத்தீர்வு கிட்ட வேண்டும் என்பதில் தமிழீழ மக்களும் அக்கறைகாட்டி வருவதில் வியப்பொன்றுமில்லைத்தான்.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களும் இப்பேச்சுவார்த்தைகளின் முனனேற்றம் குறித்து மிகவும் ஆர்வமாகவும், ஆவலாகவும் இருபபதை நாம் காணமுடிகின்றது. பேச்சுவார்த்தைகள் தங்குதடையில்லாமல் சுமுகமாக நடைபெற வேண்டும். பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடந் தால்தான், மற்றைய விடயங்களும் சுமுகமாக நடந்தேறும் என்பது இவர்களுடைய எண்ணமாக இருக்கின்றது.

ஆனால், தமிழ்மக்களின் தலைவிதியும், நல்ல எதிர்காலமும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் மட்டும்தான் தங்கியிருக்கிறதா? என்ற கருத்தைச் சற்று ஆழமாக அலசிப் பார்ப்பது அவசியம்.

சுமார் ஓராண்டுக்கு முன்னால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசும் கையெழுத்திட்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில் சில விடயங்களை வலியுறுத்தியுள்ளதை நாம் பல தடவைகளும் சொல்லிவந்துள்ளோம். போர் ஓயந்து, போர்நிறுத்தம் ஏற்பட்டு, பொது மக்களின் வாழ்க்கை - இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு வழிசமைத்தல் என்பது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கியமான ஒன்றாகும்.

இந்த இயல்புநிலையினுடே ஒரு நியாயமான சமாதானத் தீர்வை அடைவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இவை இரண்டும் செயல்படுகின்ற அதே வேளையில், தமிழ்மக்களின் புனருத்தாரண, புனர்நிர்மாணப் பணிகள் ஏக காலத்தில் நடைபெறவேண்டும். என்பது எம்முடைய நியாயமான எதிர்பார்ப்பாகும்.

ஆனால், தமிழ்மக்களின் வாழ்க்கை- இயல்புநிலைக்குத்

மெல்போர்னிலிருந்து
சபேசன்.

திரும்புவதற்குத் தடையாக இன்று இராணுவம் செயல்பட்டு வருவதை நாமறிவோம். இராணுவச் சமநிலையும், உயர்பாதுகாப்பு வலயங்களையும் காரணங்காட்டி தமிழ்ப் பொதுமக்களின் வீடுகள் மற்றும் பாடசாலைகள், பொதுக் கட்டங்கள் போன்றவற்றிலிருந்து இராணுவம் விலக மறுத்துவருகின்றது. போதாக் குறைக்குப் பல இடங்களில் புதிதாக இராணுவம்-முகாம்களை அமைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றது.

தமிழீழப் பொதுமக்களின் வாழ்க்கை- இயல்புநிலைக்குத் திரும்பாமல் தடையாக இருக்கும் காரணிகளில் இது மிகவும் வெளிப்படையான காரணம்.

புரிந்துணர்வு உடன்பாட்டின்படி இயல்புநிலையை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து தவறி வருகிறது. இதனால்தான் புலிகள் இன்று பேச்சுக்களில் இருந்து இடைவிலகும் சூழல் தோன்றியது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

- திருக்குறள்.

## நமது நோக்கு

### ஏமாற்றமும் விளைவும்!

சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் கண்டவற்றை நடைமுறைப்படுத்துவதில் இழுத்தடிப்புக்களையும், தாமதத்தையும் காட்டிவந்த அரசாங்கத்தரப்பின் போக்கும், உதவி வழங்கும் மாநாடு என்னும் பெயரில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பின்றி, அழைப்பின்றி நடாத்தப்பட்ட வொஷிங்ரன் முன்னோடி மாநாடு பற்றிய அதிருப்தியும் - சமாதானப் பேச்சுக்களிலிருந்து சில காலப்பகுதிகளுக்கு இடைவிலகுவதான அறிவிப்பை மேற்கொள்ளவேண்டிய நிலையை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டிருக்கும் பெரும் இக்கட்டான சூழலாக, ஊடகங்கள் பலவற்றிலும் விபரிக்கப்படும் விடுதலைப் புலிகளின் அறிவிப்பு- அரசாங்கத்தரப்பிடையே அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன்பின்னர் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களும் - தமிழ்மக்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எத்தகைய நல்விளைவுகளையும் பெற்றுத்தந்துவிடவில்லை என்பதை இப்போதுதான் விடுதலைப் புலிகள் உடனடியாக அறிவித்துவிடவில்லை.

சமாதானப் பேச்சுக்களின் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியும் - போர் ஓய்ந்தகாலத்தில் தமிழ்மக்கள் மீண்டும் சுமுக வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான அவசியமும் முக்கியத்துவமும் தொடர்பாகவும் விடுதலைப் புலிகள் வலியுறுத்திவந்தும்கூட, அவை எவற்றுக்கும் சரியான தீர்வுகளைத்தர அரசாங்கத்தால் முடியவில்லை.

போர் நிறுத்தத்தையும் - அதன் நடைமுறைகளையும் உறுதியாகக் கைக்கொள்வதில் அர்ப்பணிப்பும், விசுவாசமும் காண்பிக்கப்பட்டதுடன் -

பேச்சுக்கள் மூலமாக ஆக்கபூர்வமான விளைவுகளைத் தமிழ்மக்களுக்குப் பெற்றுத் தந்துவிடவும் - பல்லாண்டுகள் நீடித்த போரின் தாக்கங்களிலிருந்து மக்களை விடுவிக்கவும், மக்களை வழமைநிலைக்குக் கொண்டுவரவும் - விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்புடனும், நேர்மையுடனும் செயற்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நேர்மையும், அர்ப்பணிப்பும் தனியே அரசாங்கத்தால் மட்டுமல்ல சர்வதேச நாடுகளாலும் பாராட்டப்பட்டன.

விடுதலைப் புலிகளின் இணக்கமான போக்கும், அமைதி முயற்சிகளில் அவர்கள் காட்டிய ஆர்வமுமே - கடந்த ஆண்டு ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டுக்கு வலுச்சேர்த்தது.

அதேவேளை - எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டிலும் - சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பே, வேண்டும் நிதியுதவிகளைப் பெற்றுத்தருவதற்கு முக்கியமான காரணமாக அமைந்திருக்கும் என்றும்-

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணைந்து போகும்போதே சர்வதேசம் செவிசாய்க்கும், நம்பிக்கை கொள்ளுமென்றும் - ஜப்பான் அரசாங்கத்தின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி அண்மையில்கூட வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அந்தளவுக்கு சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும், முன்னேற்றகரமான, ஆக்கபூர்வமான பங்களிப்பும் இருந்தபோதும் -

தமிழ்மக்களது சுமுக வாழ்வை உறுதிசெய்யவேண்டிய நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் அக்கறையீனமும்,

'ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி' என்றது போல - ஜப்பான் மாநாட்டுக்கே புலிகளின் பங்கேற்பு, வொஷிங்ரன் முன்னோடி மாநாட்டுக்கு அவர்கள் தேவையற்றவர்கள் என்றவாறான போக்கும் - அரசாங்கத்தின் எதிர்வினைகளாக வெளிவந்தன.

போரினால் சிதைக்கப்பட்ட அத்தியாவசியத் தேவைகள் மீளமைக்கப்படும் எனவும், அடிப்படைக் கட்டுமானம் புனரமைக்கப்படுமெனவும், கடந்த ஓராண்டுக்கும் அதிகமாக எதிர்பார்த்திருந்த மக்கள் - அங்கொன்றும் இங்கொன்றுமான சிற்சில செயற்பாடுகளையே கண்டனரேயன்றி - முழுமையான சுமுக வாழ்வுக்குரிய நடவடிக்கைளுக்கு இன்னமும் அரசினால் கால்கோள் இடப்படவில்லையென்றே கூறலாம்.

நிலைமை இவ்வாறிருக்க - சர்வதேசத்திடம் நிதியுதவி பெறப் புறப்படும் அரசாங்கம் - முழுநாட்டுக்குமான உதவிகளில் கருத்தூன்றிக்கொண்டு- அதனுள் வட-கிழக்கை உள்ளடக்க முயற்சிக்கின்றதே தவிர, ஆண்டுக்கணக்கில் தொடர்ந்த போரினால் அவலப்பட்டு அகதிகளாக வாழும் மக்கள் பற்றியோ- பரவலாகவும், ஆழமாகவும் அழிக்கப்பட்ட வட-கிழக்கின் உட்கட்டுமானம் தொடர்பாகவோ விசேட கவனம் செலுத்தப் பின்னடிக்கின்றது.

இந்த நேர்மையற்ற, நீதியற்ற அணுகுமுறை - எந்த நிலையிலும் தமிழ்மக்களுக்கு உதவிடாது என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாயுள்ளனர்.

எனவே, முறையாகச் செயற்பட அரசாங்கம் இனியும் காலந்தாழ்த்துமாயின், அதிருப்தியையும், முரண்பாடுகளையும் நிரந்தரமாக்க முயலுமாயின் - அதன் விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக்களிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு இடைநீங்கும் அறிவிப்பு- மிக உறுதியாக எடுத்துச்சொல்லியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் தளராதிருக்கும் விடுதலைப் புலிகளின் இந்த ஆட்சேபத்திற்கும், எதிர்ப்புக்கும் அரசாங்கம் தரப்போகும் பதில்களிலேயே - செயற்படு தகைமையிலேயே இலங்கைத் தீவில் அமைதிவழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் தங்கியிருக்கிறது.

# தற்போதைய சூழலை விளக்கவே தலைவர் எம்மை அனுப்பிவைத்தார்!

## புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமாரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தற்போது எழுந்துள்ள தீவிரமான அரசியல் சூழ்நிலை, இந்தச் சூழ்நிலையில் மக்களின் பங்களிப்பு என்பவை பற்றிய விளக்கங்களைக் கொடுப்பதற்காக, தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் தம்மை யாழ்ப்பாணம் அனுப்பியிருப்பதாக, விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் - தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் பாலகுமாரன் மேலும் குறிப்பிட்டதாவது, இப்போது நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பது இரண்டாவது மீள்வருகையென்றே சொல்லவேண்டும். இதுவரை நாம் சமாதான முயற்சிகளில் நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடித்தோம். ஆனால், கடந்தகால அனுபவங்கள் - தமிழரின் நெகிழ்வுப்போக்கினைப் பலவீனமாகப் பார்த்த வரலாறுகளாகவே உள்ளன.

இப்போது தீவிரமானநிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இது போர்பதற்றமான சூழல் அல்ல என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

யாழ்ப்பாண மக்களின் கருத்து - ஒட்டுமொத்த தமிழீழ மக்களின் கருத்தாகவே இன்றும் இருக்கிறது. எனவே, யாழ்ப்பாண மக்களுக்கு இன்றைய அரசியற்சூழ்நிலை குறித்து விளக்கமளிக்கவே எம்மைத் தலைவர் அனுப்பியுள்ளார்.

கடந்த ஒரு வருடகால யுத்தநிறுத்த காலத்திலும், பேச்சுகளிலும் புலிகள் விட்டுக்கொடுப்புடனும், அரசியல் முதிர்ச்சியுடனும் செயற்பட்டுள்ளோம். போதிய நல்லெண்ணத்தை நாம் வெளிப்படுத்தியுள்ளதோடு, சமஷ்டித் தீர்வு குறித்தும், அரசமைப்பு மாற்றம் குறித்தும் அரசுக்குத் தெரிவித்திருந்தோம்.

இராணுவத்தை முற்றாக விலகுமாறு நாம் கோரவில்லை. மக்கள் வாழ்விடங்களிலிருந்து விலகியிருக்கவே கோரினோம். ஆனால், இது செயற்படுத்தப்படவில்லை.

இதனால், நெகிழ்ச்சியான போக்கை இடைநிறுத்தி, அரசாங்கத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எமது அதிருப்தியையும், மனக்குறையையும் வெளிப்படுத்தியுள்ளோம். இது போர்ப் பதற்றமான சூழல் அல்ல.

போரைத் தவிர்க்கவேண்டுமானால், புலிகளின் படைப் பலத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு மக்கள் உதவவேண்டும். அத்துடன், அனைத்து மக்களும் வீதியில் இறங்கி தமது நிலைப்பாட்டை வெளியுலகுக்குச் சொல்ல முன்வரவேண்டும். இதன்மூலம் நாம் போரைத் தவிர்க்கலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிர்வாக அமைப்புக்களை மாற்றுமாறு சர்வதேச நாணய நிதியம் அழுத்தம்!

## நிதியுதவி வழங்க அரசுக்கு நிபந்தனை

(கொழும்பு)

நிர்வாக அமைப்புக்களில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 56.7 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் நிர்வாகத்துறைகளில், குறிப்பாக - வறுமை ஒழிப்பு, நிதித்துறை, அரச கூட்டுத்தாபனங்கள், ஊழியர் தொழிற்சங்கங்கள் ஆகிய துறைகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே சர்வதேச நாணயநிதியம் இந்த நிதியுதவியை வழங்கியுள்ளது.

அத்துடன், மக்கள் வங்கியின் செயற்பாடுகளை மறுசீரமைப்புச் செய்தல், வரி அறவீட்டைத் துரிதமாக்குதல், மின்சாரம், பெற்றோலியத்துறைசார்ந்த அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல், அரசாங்க வரி வீதங்களை மீளாய்வு செய்தல் போன்ற நிபந்தனைகளும் சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் பொருளாதாரநிலை பாராட்டும் நிலையில் இல்லை என்றும், வறுமை ஒழிப்பில் அரசு கூடியகவனம் செலுத்தவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், அடுத்த மூன்று வருடங்களுக்குள் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளது.

1977 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியபோதும், இலங்கை அரசு கட்டமைப்புக்களில் மாற்றம் செய்யவில்லை. மெதுவாகவே அவை நடைமுறைப்படுத்தப்பட்டது எனத் தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சிகமிற்சு சுகி சாகி, இதனாலேயே கட்டமைப்பு மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அழுத்தம் கொடுப்பதாகக் கூறினார்.

### ஆனையிறவு வெற்றிநாளையொட்டி 'புலிகளின் குரல்' சிறப்பு ஒலிபரப்பு

ஆனையிறவுப் பெருந்தளத்தை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்ட மூன்றாவது ஆண்டு நிறைவாகவும் மீண்டும் ஆனையிறவைக் கைப்பற்ற முனைந்த படையினரின் தீச்சுவாலை முறியடிப்பின் இரண்டாம் ஆண்டின் நிறைவாகவும் வெற்றிப்பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி பளையில் கொண்டாடப்படவுள்ளது. இந்த நிகழ்வையொட்டி புலிகளின் குரல் வானொலி காலை 7.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை ஒலிபரப்பு மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலைஞர் கருணாநிதி - வைகோவை சிறைச்சாலையில் சந்தித்துப் பேச்சு!



விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய குற்றச்சாட்டின் பேரில், பொடா சட்டத்தின் கீழ் சென்னை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோவை - தி.மு.க.தலைவர் கலைஞர் மு.கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்தது. இச்சந்திப்பின் போது, பொடா சட்டத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்தவுள்ள போராட்டம் மற்றும் பொடா சட்டத்துக்கு எதிராக வைகோ உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள வழக்கு என்பன குறித்துப் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கலைஞர் மு.கருணாநிதி - வைகோவுடன் தனியாகக் கலந்துரையாடச் சிறையதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்றும், தாம் பேசிக்கொண்டிருந்ததைச் சிறை அதிகாரிகள் அருகில் நின்று அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தாம் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்துப் பொடா சட்டத்தை விலக்குமாறு கோரும் போராட்டங்களைப் பரவலாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



இதேவேளை, கடந்த 19 ஆம் திகதி கருணாநிதி- வைகோவைச் சென்று சந்திக்க முற்பட்டபோது, சிறையதிகாரிகளால் தடுத்து திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, தமிழகத்தில் பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும், உடனடியாக இந்த விடயத்தில் மத்திய அரசு தலையிட வேண்டுமெனவும் பா.ம.க, தி.மு.க, ம.தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பிரதமர் வாஜ்பாயிடம் கோரியுள்ளனர்.

தமிழக அரசு - பொடா சட்டத்தைப் பயன்படுத்திப் பத்திரிகையாளர்களையும், அரசியல்வாதிகளையும் பழிவாங்குவதாகக குறிப்பிட்டுள்ள இவர்கள், மத்திய அரசு - ஜெயலலிதாவின் எதேச்சாதிகாரப் போக்குக்குறித்துக் கண்டிக்கத் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை -

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் - தமிழக நிலவரம் குறித்து மாநில ஆளுநரிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மக்களை எவ்வாறு சென்றடைகிறது என்பதில்தான் ஒரு பணியின் முழுமையும் நிறைவும் தங்கியுள்ளது!

**ஜே.நீக்கிலஸ் அடிகளார் யாழ்.மறை மாவட்டத்தின் குரு முதல்வர் (Vicar Genral) பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி, இப் புதிய பொறுப்பினை ஏற்கும் இவர் நமது ஈழநாட்டுக்கு வழங்கிய செவ்வி இது.**

***கேள்வி:*** யாழ். மறைமாவட்டம் ஒரு பழம்பெரும் மறைமாவட்டம். ஒரு காலத்தில் இம்மறைமாவட்டம் அனுராதபுரத்திற்கு அப்பாலும் நீடித்திருந்ததாக அறிகிறோம். அம்மறைமாவட்டத்தின் குருமுதல்வர் பதவியை அண்மையில் ஏற்றிருக்கிறீர்கள். குருமுதல்வர் பதவி பற்றி சற்று விளக்கந்தர முடியுமா?

***பதில்:*** ஒரு மறைமாவட்டத்தின் தலைவராக ஒரு ஆயர் விளங்குகிறார். அந்த ஆயருக்குத் துணைபுரியும் பதவியே குருமுதல்வர் பதவியாகும். இவர் ஒரு மறைமாவட்டத்தின் குருக்கள் அனைவருக்கும் முதல்வராகப் பணியாற்றுவார்.

ஆயருக்கு- அவரின் பணிகளில் துணைநிற்பது, ஆயர் இல்லா வேளைகளில் அவரின் பணியினைப் பொறுப்பேற்று நடத்துவது, ஆயருக்கும்- குருக்கள் - துறவிகளுக்கும் இடையிலும், ஆயருக்கும் - மக்களுக்கும் இடையிலும் ஒரு பாலமாக விளங்குவது எனப் பல பொறுப்புக்களை ஒரு குருமுதல்வர் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு குருமுதல்வராக ஆயர் தமது விருப்பப்படி தகுதியானவரெனக் கருதும் ஒருவரை நியமிக்கலாம். அவரின் பணிக்காலமும்- ஆயருடைய விருப்புக்கேற்ப நீண்டதாகவோ, குறுகியதாகவோ இருக்கலாம். குருமுதல்வரின் பணி- ஆயருடைய தனிப்பட்ட நியமனம் என்கின்ற படியால், ஆயரின் பணி முடிவடையும் போது குரு முதல்வரின் பணியும் இயல்பாகவே முடிவடையும் ஒன்றாகும். ஆயரோடு ஒத்துழைத்து மறை மாவட்டத்தைச் சிறந்த முறையில் வழிநடத்திச்செல்ல ஒரு குருமுதல்வர் எப்போதும் உழைப்பவராகிறார்.

***கேள்வி:*** தாங்கள் பதவியேற்கும் காலம் சற்று அமைதியான காலம் என்றே குறிப்பிடவேண்டும். தங்களுக்கு முன்னர் பணியாற்றிய ஜே.பி.இ.செல்வராஜா அடிகளார் ஒரு நெருக்கடியான காலத்தில் தம் பணியினை மேற்கொண்டவர். அவருடைய பணியைவிட, உங்களுடைய பணி எந்தவகையில் வேறுபட்டதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

***பதில்:*** யாழ். மறைமாவட்டத்தைச் சுதேச ஆயர்கள் பொறுப்பேற்ற பின்னர், ஐந்தாவது குருமுதல்வராகப் பதவியேற்றிருக்கிறேன். எல்லாக் குருமுதல்வர்களின் பணிகளும் ஒரேமாதிரியாக அமைந்து விடுவதில்லை. ஒருவருடைய நடைமுறை, பாவனை, அவர் பணி பொறுப்பேற்கும் காலம், அக்காலத்தின் தேவைகள், சர்ச்சைகள், சவால்கள் என்பவற்றுக்கேற்ற விதமாக ஒருவரின் பணி இன்னுமொருவரின் பணியைவிட மாறுபடலாம்.

எனக்கு முதல் இப்பதவியை ஆற்றிய ஜே.பி.இ.செல்வராஜா அடிகளை எல்லோரும் நன்கு அறிவர். அவர் நீங்கள் மிகச்சரியாகக் குறிப்பிட்டதுபோல் மிகவும் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பணி புரிந்தவர். அவர் ஆற்றிய அந்தப் பணிகளுக்காக யாழ்.மறைமாவட்டம் என்றுமே அவருக்கு நன்றியுடையதாயிருக்கும்.

அவருடைய அர்ப்பணிப்பு மிக்க பணியும், அனைவரையும் அறிந்து பழகும் விதமும், எல்லாவேளைகளிலும் எல்லோரும் அணுகத்தக்க ஒருவராக அவர் பணி செய்த விதமும் பலரையும் கவர்ந்துள்ளது.




செல்வராஜா அடிகளார் பதவி வகித்த காலத்தில் யாழ்.மறை மாவட்டத்தின் தேவை வேறாக இருந்தது. அது போர் உக்கிரமாக நடைபெற்ற ஒரு காலம். மறைமாவட்டத்துக்கு உள்ளேயே போரின் அனர்த்தங்களும், இடம்பெயர்வுகளும் நடைபெற்ற காலம். அக்கால மறைமாவட்டத்தின் தேவையை உணர்ந்து அவர் சிறப்புப் பணியாற்றினார் என்றே நான் எண்ணுகிறேன்.

நான் பதவியேற்கும் காலம் சற்று வித்தியாசமானதாக இருக்கிறது. தாங்கள் குறிப்பிட்டதைப் போன்று இது ஒரு அமைதியான காலம். இன்றைய தேவைகள் சற்று வித்தியாசமானவை. இக்காலத்தின் அவசியத்தையும், தேவையையும் கருத்திற்கொண்டு பணியாற்றலாம் என எண்ணுகிறேன். குருமுதல்வர் பணியோடு, யாழ்.மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் இணைப்பாளராகவும் பணியாற்றவேண்டிய ஒரு கடமை உண்டு. இப்பணி மூலம் பொதுமக்களோடு நெருங்கிப் பழகவும், பணியாற்றவும் வாய்ப்பு உண்டு. அச்சந்தர்ப்பத்தை முழுமையாகவும், சீராகவும் பயன்படுத்தமுடியும் என நம்புகிறேன்.

என்னால் இயன்றவரை இப்பணியினைச் சிறப்பாக ஆற்ற, முழுமையாக என்னை அர்ப்பணிக்க விரும்புகிறேன். இறைவனின் அருளும், சகோதரக் குருக்களின் துணையும் எனக்கு நிறைவாகக் கிடைக்கும் என நம்புகிறேன்.

***கேள்வி:*** தாங்கள் யாழ்.மறை மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகக் குருத்துவப் பணி புரிந்திருக்கிறீர்கள். தாங்கள் ஆற்றிய எல்லாப் பணிகளிலும் முதன்மையான ஒரு பணியாக இக்குரு முதல்வர் பணி அமைந்திருக்கிறது என எண்ணுகிறோம். தங்களின் கடந்தகாலப் பணி அனுபவங்கள் முழுவதையும் இப்பதவியில் பயன்படுத்த முடியும் என எண்ணுகிறீர்களா?

***பதில்:*** தங்களுடைய கேள்வி பொருத்தமான ஒரு கேள்விதான். எமது பணியில் நாம் ஆண்டிலும், அனுபவத்திலும் வளர்ந்து பெறுகின்ற முதிர்ச்சியின் அனுபவம்- எம் தொடர் பணியில் தெளிவாகத் தெரியவேண்டும். எமது பணியின் ஆரம்பத்தில் நாம் வைத்திருந்த எண்ணங்கள், கோட்பாடுகள், நடைமுறைகள், அணுகுமுறைகள் என்பன எல்லாம் காலம் செல்லச் செல்ல, அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க எம்மை அறியாமலே மாற்றம் பெறுகிறது. உண்மையில் அது மாற்றம் பெறவேண்டும். அம்மாற்றத்தைப் பார்த்தே மற்றவர்கள் எம்மையும், எம் பணியின் முதிர்ச்சியையும் எடைபோடுவார்கள்.

என்னுடைய 30 ஆண்டுகாலப் பணியில் ஏறக்குறையப் பத்து ஆண்டுகளைப் பங்குத்தளங்களிலும், சுமார் 15 ஆண்டுகளை நிறுவனப் பணிகளிலும், இரண்டு ஆண்டுகளை உயர் கல்வியிலும் செலவு செய்துள்ளேன். என்னுடைய பங்குப்பணிகளில் தலைமன்னார், சுண்டுக்குளி யுவானியார் ஆலயம், யாழ்.அடைக்கல அன்னை ஆலயம் ஆகிய இடங்களில் நான் ஆற்றிய பணிகள் சிறப்பானவையும், எனக்கு அனுபவம் சேர்த்தவையுமாகும். என்னுடைய நிறுவனப் பணிகளில், யாழ். மறைக்கல்வி நிலையம், திருவழிபாட்டு நிலையம், புனித சவேரியார் குருமடம் ஆகிய இடங்களில் நான் ஆற்றிய பணிகளை, எனது அனுபவங்களை ஆழப்படுத்திய களங்களாகக் கருதுகிறேன்.

***கேள்வி:*** இரண்டு வேறுபட்ட பணித்தளங்களைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். பங்குத் தளப்பணி பற்றியும், நிறுவனப்பணி பற்றியும் குறிப்பிட்டீர்கள். இப்பணித்தளங்களில் தாங்கள் குறிப்பிட்டுக் கூறவிரும்புகின்ற அனுபவம் ஏதாவது உண்டா?

***பதில்:*** 1993 முதல் 1995 வரை யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் பணியாற்றிய காலம், எனது பங்குப் பணித்தளக் காலங்களில் சிறப்பான காலமெனக் கருதுகிறேன். பங்குமக்களுடைய ஒத்துழைப்பு, பணியார்வம், வழிபாட்டிலே சிறப்பான பங்களிப்பு என்பன எனது பணித்தள வாழ்வுக்குப் பெரிதும் ஊகககமும், துணையும் புரிந்தன.

1994 ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டுப் பரிந்துரைகளுக்கு அமையப் பங்கைப் புதுப்பிக்கும் சிறப்பான ஒரு செயற்பாடாக மகாஞானொடுக்கம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.


இந்த மகாஞானொடுக்கத்திலே இடம்பெயர்ந்து பங்கிலே தற்காலிகமாக இருந்த மக்களும், நிரந்தரமான பங்கு மக்களும் ஒரேகுடும்பமாக இணைந்து செயற்பட்டது பாராட்டத்தக்கது.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்ற காலம் ஒரு இக்கட்டான காலமாக இருந்தாலும், மனநிறைவோடு சவால்களை ஏற்றுப் பணியாற்றக் கூடிய ஒரு காலமாக இருந்தது.

சவேரியார் குருத்துவக் கல்லூரி கிளிநொச்சியில் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்தபோதே அதன் அதிபர் நியமனம் கிடைத்தது. பின்னர் போரின் காரணத்தால் மடுத் திருப்பதிக்கு இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இடவசதியின்மை, போக்குவரத்துக் கஷ்டங்கள், தொடர்புகளற்றநிலை போன்றவை மத்தியிலும் குருத்துவப் பயிறசிப் பணியை நிறைவாக வழங்கப் பல குருக்கள்மாருடைய ஒத்துழைப்பும், ஆதரவும் நிறைவாகக் கிடைத்தது.

இக்கால கட்டத்தில் யாழ். ஆயருடைய கவனமும், கரிசனையும் குருமடத்தின்மேல் நிறைவாக இருந்தமையால், என் பணி மேலும் இலகுவாகியது.

***கேள்வி:*** உங்களுடைய பணியின் திட்டங்கள், தீர்மானங்கள் பற்றியே நீண்ட நேரம் பேசினோம்.



ஜே.நீக்கிலஸ் அடிகளார்

இன்றைய இந்த அமைதிநிலையில், மக்கள்- உங்கள் பணி பற்றி என்ன ஏக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும் கொண்டிருக்கிறார்கள் என அறிந்திருக்கிறீர்களா?

***பதில்:*** ஒரு பணி- மக்களை எந்த விதமாகச் சென்றடைகிறது என்பதிலேதான் அதன் முழுமையும், நிறைவும் இருக்கிறது.

எப்போதும் அணுகக்கூடிய ஒருவராக இருக்கும் ஒருவராலேயே முழுமையான பணியை மக்களுக்கு வழங்கமுடியும். எப்போதும் அணுகக் கூடிய ஒருவராகவும், மக்களோடு எப்போதும் தொடர்புகளைக் கொண்டிருப்பவராகவும், அவர்களுடைய அனுபவங்களில் அவர்களைச் சந்திக்ககூடிய ஒருவராகவும் இருக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தங்களுடைய தேவைகளில் கூடிய அக்கறையும், ஈடுபாடும் கொண்டு விளங்கும் ஒருவராகப் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் ஆயருக்குத் தமது தேவைகளையும், குறைகளையும் எடுத்துக்கூறக்கூடிய ஒருவராகவும் இவர் இருக்கவேண்டும். பங்கின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், புதிய பணிகளைத் தேவைக்கேற்ப ஆரம்பிக்க வழிகாட்டுபவராகவும் ஒரு குருமுதல்வர் எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். இவர்களின் நியாயமான ஆசைகளையும், அபிலாசைகளையும் நிறைவேற்ற என்றும் முயற்சிப்பேன். ❋

**நேர்காணல்:-**
**எஸ்.சாந்தகுமார்**

## கடமையை பொறுப்பேற்காத ஆசிரியர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிப்பு!

வட-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் கடந்த காலங்களில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனங்களைப் பெற்று, இதுவரை தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளாதவர்களின் நியமனம் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் ஜுலை மாதத்தில் மாகாணக் கல்வி அமைச்சினால் 743 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. பின்னர் டிசம்பர் 28 ஆம் திகதி மேலும் 251 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு ஆசிரிய நியமனங்கள் பெற்ற பட்டதாரிகளில் ஒரு தொகுதியினர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை. இவ்வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதிவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்காத பட்டதாரிகளின் ஆசிரிய நியமனத்தை உடனடியாக ரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களுக்குப் பதிலாகப் புதிய ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு வட- கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## குற்றவியல் பிரேரணை குறித்து சந்திரிகா அஞ்சவில்லையாம்

(கொழும்பு)

தனக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை ஒன்று கொண்டு வரபபடுமாயின், அது குறித்துத் தாம் அச்சமடையப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தனது எட்டரை வருட பதவிக் காலத்தில் குற்றவியல் பிரேரணையில் குற்றம் சாட்டப்படும் அளவுக்கு, எதுவித சட்டரீதியான அல்லது ஆத்மார்த்த ரீதியான தவறு எதனையும் செய்யவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷ் விஜயத்தை மேற்கொணடிருந்த ஜனாதிபதி, விஜயத்தின் முடிவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ததாகவும், எனினும் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத வகையில் தடை ஏற்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் அதிகம் தயவுடன் நடந்து கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (01)

## இலங்கைக்கு ஒரு கோடி ரூபா ஜப்பானிய அரசு சலுகை கடன்

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு 2 கோடி 80 லட்சம் ஜப்பானிய யென்களைக் கடனாக வழங்கவிருக்கின்றது.

இந்தத் தொகை இலங்கை ரூபாவில் 1 கோடி 61 லட்சமாகும். ஜப்பானிய அரசாங்கத்தின் சலுகை அடிப்படையில் கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படுகின்றது.

இருதரப்பு அடிப்படையில் ஜப்பானிலிருந்து கடன்களைப் பெறும் நாடுகள் மீது சுமத்தப்படும் பழுவை நீக்கும் நோக்கத்துடன் இக்கடன் வழங்கப்படுகின்றது.

இந்தக் கடனைப் பயன்படுத்தி உலகில் எந்த ஒரு நாட்டிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும்.

## இந்திய வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்க இலங்கை அரசு முடிவு

### உயர்மட்டக் குழு இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்தியாவுடனான வர்த்தகத் தொடர்புகளை அதிகரிப்பதற்கு அமைச்சர் றோகித போகல்லாகம தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது. இந்தக் குழுவில் ஆறு பேர் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து இந்த உயர்மட்டக் குழு- இந்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இந்திய நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங்கையும் மற்றும் தொழிலதிபாகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# கர்பாலா நகரில் ஷியா முஸ்லிம்கள் அமெரிக்காவை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!



மத்திய ஈராக்கிய நகரான கர்பாலாவில் மதவைபவம் ஒன்றில் கூடிய இலட்சக்கணக்கான ஈராக்கிய ஷியா முஸ்லிம்கள் அங்கு அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். ஷியா முஸ்லிம்கள் கர்பாலா நகருக்கு வருவது சதாம் ஆட்சியில் தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது அவர்கள் தமது புனிதப் பிரதேசமான கர்பாலாவுக்கு இலட்சக்கணக்கில் வந்து மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு வந்து குவியும் ஷியா முஸ்லிம்களே அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஈராக்கிலிருந்து ஆக்கிரமிப்புப்படைகள் உடனடியாக வெளியேறவேண்டுமென அவர்கள் கோஷமிட்டனர். கடந்த திங்கள் முதல் இத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கர்பாலா நகரில் முகம்மது நபியின் பேரனான இமாம் ஹுசைன் வணக்கஸ்தலம் ஒன்று உள்ளது. 7 ஆம் நூற்றாண்டில் இரண்டு முஸ்லிம் பிரிவுகளிடையே இப்பகுதியில் நடைபெற்ற போரில், அவர் கொல்லப்பட்டார். முகமதி நபிக்குப் பின்னர் யார் தலைவராக நியமிக்கப்படுவது என்பது குறித்தே இந்தப் போர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் போரினால் ஏற்பட்ட பிளவுகளே பின்னர் முஸ்லிம் மக்களிடையே சுனி முஸ்லிம், ஷியா முஸ்லிம் என்ற பிரிவுகளைத் தோற்றுவித்தது. ஈராக்கின் வடக்கே சுனி முஸ்லிம்களும், தெற்கே ஷியா முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.




ஹொங்கொங் நகரில் - 'சார்ஸ்' நோய் அச்சுறுத்தலால் பயணத்திலும் வாயை மூடிக் கவசமிட்டபடி பறக்கும் ஒரு தம்பதி.

# பங்களாதேஷ் படகு விபத்து 300 பேர் பலியானதாக அச்சம்



பங்களாதேஷில் நடைபெற்ற இரு வேறு படகு விபத்துக்களில் சுமார் 300 பேர் பலியாகியுள்ளதாக அஞ்சப்படுகின்றது. தலைநகர் டாக்கா அருகே பூரிகங்கை ஆற்றில், கடும் காற்றில் சிக்கிப் படகு ஒன்று மூழ்கியதில், பெரு[illegible] குழந்தைகள் உள்ளிட்ட 104 போ பலியாகியுள்ளனர். மேலும் காணாமற்போன 200 பேர் இதுவரையில் மீட்கப்படவில்லை.

இதேபோன்று- கடுங்காற்றில் சிக்கி மற்றுமோர் படகு மூழ்கியதில் 50 பேர் பலியாகியுள்ளனர். திருமணத்துக்குச் சென்ற ஒரு குழுவினரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.



அழிக்கப்பட்ட ஈராக்கிய நூதனசாலையில் - எஞ்சியிருக்கும் [illegible]ழுகுச் சிலைகளை பரிசோதிக்கிறார் ஊழியர் ஒருவர்.

# பலஸ்தீனத்தில் புதிய அமைச்சரவை; அரபாத்தினால் நெருக்கடிநிலை!

பலஸ்தீன அரசின் புதிய பிரதமர் மஹ்மூட் அபாஸ் தலைமையில் விரைவாக புதிய அமைச்சரவையை உருவாக்கும்படி அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தும் பிரதமர் அபாஸும் புதிய அமைச்சரவையை உருவாக்குவதில் காட்டும் தாமதத்தை அடுத்தே, அமெரிக்காவின் இப்புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. தனது அமைச்சரவைக்கான அமைச்சர்களை தெரிவதில் அபாஸுக்கு முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

புதிய பலஸ்தீன அரசு அமைந்த பின்பே பலஸ்தீன அமைதிக்கான தனது திட்டத்தை வெளியிடுவதாக அமெரிக்கா நிபந்தனை விதித்திருந்தமை தெரிந்ததே.

அபாஸ் புதிய அமைச்சர்களை தெரிவதற்கு அரபாத் இடையூறாக இருப்பதாகவும், முன்னாள் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை உள்துறை அமைச்சராகத் தெரிய, அபாஸ் எடுத்து முயற்சியை அரபாத் நிராகரித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புதிய பிரதமராக அரபாத் பதவி ஏற்பதை அபாஸ் விரும்பவில்லை, அதற்கு பதிலாக முன்னாள் பாதுகாப்பு அதிகாரியும் தனது நெருங்கிய சகாவுமான ஹானி சுல்ஹகன் என்பவரையே பிரதமராக தெரிவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.



யசீர் அரபாத்


# 'சார்ஸ்' நோயினால் மூடப்பட்டிருந்த ஹொங்கொங் பாடசாலைகள் திறப்பு

(ஹொங்கொங்)

'சார்ஸ்' நோய்த் தாக்கத்தினால் மூடப்பட்ட ஹொங்கொங் பாடசாலைகள், ஒரு மாதத்தின் பின் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன. சுமார் 400 பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்ட போதிலும், 10 பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படவில்லை.

பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமுதல் - முன்பாதுகாப்பாக, அவர்களது உடல் வெப்பநிலையைப் பரிசோதித்துப் பதிவுசெய்த பின்பே அனுப்பிவைக்கின்றனர்.

'சார்ஸ்' நோயால் 1402 பேர் ஹொங்கொங்கில் பாதிப்புற்றுள்ளனர். இவர்களில் 94 பேர் இறந்துள்ளனர். 436 பேர் இதுவரையில் சுகமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வீடு திரும்பியுள்ளனர்.



# தொழிற்சாலை பணியாளர் மீது தாக்குதல்

கடந்த இரண்டு ஆண்டு காலமாக பணியாளர்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த, ஆடைத்தொழிற்சாலை ஒன்றை மீட்கும் பணியில் நேற்று ஆர்ஜென்ரீனப் பொலிஸார் ஈடுபட்டனர். ஊழியர்களை அப்புறப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, ஆர்ஜென்ரீனப் பொலிஸார் இந்நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

பொலிஸாரின் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு, ரப்பர் குண்டுத் தாக்குதல் காரணமாக இருவர் காயமடைந்தனர். ஆர்ஜென்ரீன ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரம் இருக்கையில், இந்தத் தொழிற்சாலைப் போராட்டம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் மீண்டும் வன்முறைகள் 22 பேர் பலியானதாக அறிவிப்பு

காஷ்மீரில் மீண்டும் தலைதூக்கியுள்ள வன்முறைகளில் 22 பேர் பலியாகினர். 21 பேர் காயமுற்றனர். பாகிஸ்தான் எல்லை அருகே நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இந்த மரணங்கள் நிகழ்ந்தன. கண்ணிவெடிச் சம்பவமொன்றில் ஐவர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர்.

சிறிநகர் அருகே நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஒன்பது இந்திய எல்லைக் காவற்படையினர் காயமடைந்தனர். காஷ்மீரில் இந்தியப் பிரதமர் நான்கு நாட்களின் முன் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றியபின்பே, அங்கு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. காஷ்மீர் தொடர்பாகப் பேச்சு நடத்த, அங்குவைத்து பிரதமர் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



பக்தாத்தின் பிரதான சிறைச்சாலையில் - புதைகுழிகளைத் தோண்டும் பணி நடைபெறுகிறது. சதாம் ஆட்சிக்காலத்தில் இவற்றில் பலர் கொன்றுபுதைக்கப்பட்டிருப்பதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

# நிரந்தர அமெரிக்க படைமுகாம் ஈராக்கில் அமைக்கமாட்டோம்!

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

ஈராக்கில் நிரந்தர இராணுவத்தளம் ஒன்றை அமைக்கும் யோசனை எதுவும் இல்லை என, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் அறிவித்ள்ளார்.

இதேவேளை- பக்தாத்தின் புதிய ஆளுநராக அப்பகுதி மக்களால் தெரிவான அல்- சுபைதீனின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அமெரிக்கா அறிவித்துள்ளது.

உலகவலம்

இது இவ்வாறிருக்க- ஈராக்கின் ஷியா முஸ்லிம் பிரிவின் தலைவர் ஷேக் முகம்மது அல்பார் துசி, அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்டதை அடுத்து, ஷியா முஸ்லிம்களிடையே கொந்தளிப்பு நிலை தோன்றியுள்ளது. இக்கைது குறித்துக் கருத்துக்கூற அமெரிக்க அதிகாரிகள் மறுத்துவிடடனர். ஷியா முஸ்லிம்களின் ஆதரவின்றி, அமெரிக்காவினால் ஈராக்கில் புதிய ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்கமுடியாது என, அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இந்தியாவிலும் 'சார்ஸ்' ஆபத்து எச்சரிக்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. புனே நகர் வைத்தியசாலையில் இக் காட்சி பதிவானது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




# பருத்தித்துறை பாதுகாப்பு வலயத்திலுள்ள முக்கியமான வீதிகளைத் திறந்துவிடுக!

## வடமராட்சி வடக்கு மீனவர் சங்கம் கேட்கிறது

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள- கல்லூரி வீதி, பொலிஸ் நிலைய வீதி, துறை வீதி ஆகியவற்றைத் திறந்து, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசெய்யுமாறு, வடமராட்சி மீனவர் சமாசத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மீனவர் சமாசப் பிரதிநிதிகளுக்கும், யுததநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே, மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பதிலளித்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், அவர்களின் கோரிக்கை தொடர்பாக தாம் படைத்தரப்புடன் விரைவில் சந்திப்பொன்றை நடாத்தி, உரிய பதிலொன்றைப் பெற்றுத்தருவதாகக் கூறினர்.

இதேவேளை- மேற்படி வீதிகள் யாவும் 1996 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்து சென்றதிலிருந்து போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டன. அத்தோடு, இவ் வீதியில் பிரபலம்பெற்ற பாடசாலைகளான ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியன அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- அத்துமீறிவந்து குடாக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதோடு, மீனவர்களுக்கும் தொல்லை கொடுத்து வருகின்ற இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி ஒலே புரூண்டத்துடன், மீனவர் சமாசம் நடத்திய கலந்துரையாடலில்- மீனவரின் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன், படைத்தரப்புடன் புரூண்டம் கலந்துரையாடியதை அடுத்து மேற்படி முடிவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை- கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பாஸ் நடைமுறை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட படைத்தரப்புப் பொறுப்பதிகாரி, கடற்தொழில் நீரியல்வள அமைச்சினால் மீனவருக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகள் வழங்கி முடிந்ததும், பாஸ் நடைமுறை முற்றாக நீக்கப்படும் என்று தெரிவித்தார். (23)

### தோப்பூரில் நேற்று முஸ்லிம் ஒருவர் படுகொலை

# தீய சக்திகளின் நடவடிக்கையென விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்!

நேற்றுக்காலை தோப்பூர் செல்வா நகரில், முஸ்லிம் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். இக்கொலையை விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

செயிலாப்தீன் மீரா சாகிபு என்ற 50 வயது நபரே கொல்லப்பட்டவராவார். நீரோடையில் குளித்துக்கொண்டிருந்த இவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தார். மரணமடைந்தவரின் தலை வாளினால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவருடன் சென்ற இவரது மனைவி ஜமீலா உம்மா, கடுமையாகக் காயமடைந்து தோப்பூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவரின் சடலம் வைத்திய சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் கருத்துக் கூறுகையில்-

இது ஒரு விஷமத்தனமான, காட்டுமிராண்டி நடவடிக்கை. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்சம்பவத்தைச் செய்தவர்கள், நிச்சயம் முஸ்லிம் - தமிழ் உறவைக் குழப்புவதை நோக்கமாகக் கொண்டு இதனைச் செய்துள்ளனர். இச்செயலின் பின்னணியில் சமாதானச் செயலைக் குழப்பும் சக்திகளின் மறைமுகக் கரம் இயங்குவதை அனைவரும் உணரமுடியும் என்றார்.

இதேவேளை- நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் கருத்துக் கூறுகையில்-

சமாதானத்தைச் சீர்குலைக்க வைக்கும் தீய சக்திகளை இனங்கண்டு அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றார்.

# புலிகளை சமாதானப் பேச்சிலிருந்து விலக வேண்டாம் எனக் கோரிக்கை!

## தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகக் கூடாது என்று, தென்னிலங்கை மதத் தலைவர்களும், இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் முக்கிய உச்சிமாநாடு, வட-கிழக்குப் பிரதேச மக்களுக்கும் தென்பகுதியில் வாழும் மக்களுக்கும் முக்கியமானது என்று, சமாதானத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்கான சங்கத்தின் தலைவரான, தொடம்பகல ராகுல தேரர் கூறினார்.

லங்கா சமசமாசக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்,

நெருக்கடிக்கான தீர்வு, சமாதானப் பேச்சுத்தான் என்று குறிப்பிட்டார்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில் -

அநேகமான எல்லாச் சமாதானப் பேச்சுக்களுமே தடைகளுக்கு மத்தியில்தான் நடத்தப்படுகின்றன. விடுதலைப் புலிகள், தற்காலிகமாக பேச்சுக்களிலிருந்து விலகியுள்ள போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமுகமாக அவர்கள் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் இணைந்து கொள்வாாகள் என நம்பிக்கை தெரிவித்தார்.

### இந்தியா..

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியா, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவுவதாகவும், ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் - அடிக்கடி கூறிவருகிறது. அவ்வாறு கூறினால் மட்டும் போதாது நேரடியாக உதவ முன்வரவேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு உதவுமுகமாக, தலைவர் பிரபாகரனுடன பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு வசதியாக, புலிகள் இயக்கம் மீதான தடையை இந்தியா தளர்த்தவேண்டும். இது விடயமாக, இந்தியா ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தாமல் - நேரடியாக புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

### முன்னைய...

தற்போது எழுந்துள்ள அவசர நிலை காரணமாக, நாட்டின் பாதுகாப்புக் குறித்து நேற்று - முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை ஜனாதிபதி அழைத்துக் கலந்துரையாடியதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

பிரதமரும் - பாதுகாப்பு அமைச்சர், , முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உட்பட தேசிய பாதுகாப்புச்சபையை நேற்றுக் காலை உடனடியாகக் கூட்டி, இந்த விடயம் குறித்து ஆராய்ந்ததாக மேலும் தெரியவருகிறது.

### சமாதானப்...

பந்தம் தொடர்பாக, இனி ஜனாதிபதி மட்டத்திலேயே முடிவுகள் எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதற்குத் தாமதமாகும் ஒவ்வொரு கணமும், சமாதானப் பேச்சுக்கள் முடிவுகளை எட்டாது நீண்டுசெல்லவே வழிவகுக்கும் எனப் பதிலளித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசாங்கத்தால் எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்ய முடியாது என்றும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள், உரியமுறையில் நடைபெற்றால் தாம் அதற்கு ஆதரவு தரத்தயார் என ஜனாதிபதி அப்பொழுது குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் சமுகமளித்திருந்தார்.

இதேவேளை- ஜனாதிபதி, இன்றிரவு 8.30 மணிக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சந்தித்து, தற்போதைய நிலைவரம் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

### உபகுழுவில்...

யோகிப்பது இன ஒதுக்கலைக் காட்டுவதாகவே அமையுமென சந்திரசேகரன் இச்சந்திப்பின்போது பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை - அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமரசத் தூது செல்ல, சந்திரசேகரன் நேற்று எடுத்த முயற்சி கைகூடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

### சமாதான நட...

நோர்வேத் தூதுவர் மற்றும் நோர்வே அனுசரணையாளர் அடங்கிய குழுவினர், மிக விரைவில் கொழும்பு வந்து, அரச தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும், வன்னிக்கும் சென்று புலிகள் தரப்புடன் பேச்சு நடாத்தி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் பழைய வழித்தடத்துக்குக் கொண்டுவர அவர்கள் முயற்சிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வது மிக முக்கியமானதாகும். இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி, இந்தச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ளமுடியுமென்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# பேச்சுக்கள் தொடரவேண்டும் என்பதே எனது விருப்பமும்!

## யாழ். செயலகத்தில் அமைச்சர் ஜெயலத்

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் தொடரவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். எவற்றுக்கும் உடனடியாகத் தீர்வுகாண முடியாது. உயர்பாதுகாப்பு வலயம், கடல்வலயம் என்பவை குறித்து நாம் இப்போது பரிசீலித்து வருகிறோம் என புனர்வாழ்வு, புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று- யாழ்.அரச செயலகத்தில் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதி அபிவிருத்திக்காக, கடந்தகாலங்களில் பல உதவிகளை வழங்கியதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அவை குறித்த புள்ளி விபரங்களையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கிலிருந்தும் நெல்லைக் கொள்வனவு செய்ய நாம் திட்டமிட்டுவருகிறோம். அமைச்சைவிட்டு வெளியேறும்போது, குற்றமற்றவனா கவே வெளியேற நான் விரும்புகிறேன். சாவகச்சேரி சந்தைக் கட்டட புனரமைப்பில் நான் நிதி கையாடல் செய்ததாக 'சண்டே லீடர்' பத்திரிகை கூறியுள்ளது. இதற்கு எதிராக நான் 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## கடல் வலய விவகாரம் தொடர்பான சந்திப்பும் ரத்து

(வவுனியா)

ஓமந்தையில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த, கடல் வலயங்கள் தொடர்பான - விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் நடைபெறமாட்டாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பை, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்பாடு செய்திருந்தது. இச்சந்திப்புக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பூர்த்தியடையாததால், இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாக ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் கூறினார்.

# மரண அறிவித்தல்

## இராமச்சந்திரன் செல்லப்பா

(செல்லையா - நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தாளையடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், தற்போது 91/1 இராமகிருஷ்ன அவெனியு வெள்ளவத்தையில் வசித்தவருமான இராமச்சந்திரன் செல்லப்பா (செல்லையா) அவர்கள் நேற்றுமுன்தினம் 21.04.2003 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான இராமச்சந்திரன் - நாகமுத்து அவர்களின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான இராமலிங்கம் - கனகாம்பிகை அவர்களின் அன்பு மருமகனும், சிவஞ்ஞானசுந்தரியின் அன்புக்கணவரும், கல்யாணி, கருணாகரன், வசந்தராணி, உதயராணி, ஜெயராணி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும், சோதிதாசன், சுகிர்தா, வரதராஜசிங்கம், கணேசநாதன், அருட்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, சாருகா, நிலான், கிரிநாத், மீராபானு, நளின் ரவிநாத், ஜஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை சௌந்தரம், முத்தையா, செல்லம்மா மற்றும் சின்னம்மாவின் அன்புச் சகோதரனும், நாகரெத்தினம், ஜீவானந்தம், இந்திரானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.04.2003) காலை 8 மணி தொடக்கம் பொறளை ஜெயரட்ணா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
ப. வரதராஜசிங்கம் (விண்ணன்)
(மருமகன்), குடும்பத்தினர்,

*91/1, இராமகிருஷ்ண அவெனியு,*
*வெள்ளவத்தை.*
*கொழும்பு - 06. T.P:- 01-360232*

(சி/868)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.